www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை - 17 பங்குனி - 1993

(காங்கிரஸ்சிறப்பிதழ்)


## புனர்வாழ்வு, ஜனநாயகச்சூழல், அமைதி சமாதானத்தை ஏற்படுத்துதல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உடனடிப்பணிகள் என

# வெற்றிகரமான இரண்டாவது காங்கிரஸ்

## வலியுறுத்து

அகதிகளாயுள்ள மக்களுக்கான புனர்வாழ்வு வேலைகளை துரிதப்படுத்தல், அதிகரித்துவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறீலங்கா அரசினாலும், புலிகளினாலும் சீர்குலைக்கப்பட்டுள்ள தமிழ் முஸ்லீம் உறவை சீரமைத்தல் ஆகியவற்றை உடனடிப்பணிகளாக மேற்கொண்டு ஒரு ஜனநாயக சூழலை ஏற்படுத்தி அமைதி, சமாதானம் மக்களுக்கு கிட்ட வைத்தல் மூலம் தேசிய விடுதலை, சமூகமாற்றம் ஆகியவற்றுக்கான முனனேற்றப்பாதையை முன்னெடுக்க, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அயராது பாடுபடும் என அதன் இரண்டாவது காங்கிரசில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சென்னையில் 5.02.93 முதல் 9.02.93 வரை நடைபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் வெற்றிகரமாக நடந்தேறியது.

1.2.93 முதல் 4.2.93 வரை பிராந்திய மாநாடுகள் இடம் பெற்றன. மட்டக்களப்பு பிராந்தியம் (அம்பாறை உட்பட) வன்னிப் பிராந்தியம் (மன்னார் முல்லைத்தீவு உட்பட) மலையக பிராந்தியம், திருமலை பிராந்தியம், யாழ் பிராந்தியம் (கிளிநொச்சி உட்பட) ஆகிய பிராந்தியங்களின் மாநாடுகள் இடம் பெற்றன.

பிராந்திய மாநாடுகளில் பங்கு கொண்ட உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், சர்வதேச கிளைகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இரண்டாவது காங்கிரசில் கலந்து கொண்டனர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அதி உயர் தலைமையாக பதினைந்து பேர் கொண்ட மத்திய குழு தெரிவு, காங்கிரஸ் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாயிருந்த தமிழ்பேசும் மக்களின் பாசமிகு தலைவன் தோழர். பத்மநாபா சென்னையில் வைத்து பாசிச புலிகளால் படுகொலைசெய்யப்பட்ட பின்பு செயலாளர் நாயகமாக பொறுப்பேற்றுக்கொண்ட தோழர். க. பிரேமச்சந்திரன் மீண்டும் ஏகமனதாக செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டார்.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஈழ மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகள் பற்றியும், ஈழப் போராட்டத்தின் உண்மையான அர்த்தத்தையும் புரியவைப்பதற்காக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எப்போதும் பாடுபடும் என்றும்

சமூக முன்னேற்றம், நீதி, ஜனநாயகம் ஆகியவற்றில் கடப்பாடு கொண்ட கட்சியே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியாகும் இந்த நல்ல அம்சங்களும் அபிலாஷைகளும் மக்களிடையே நிலவுவது ஆயுத நடவடிக்கைகள் மூலம் தடுக்கப்படுமானால் மக்களுக்காக அவற்றை பாதுகாத்திட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அனுபவங்களைக் கொண்டு போராடும் எனவும்

புலிகளின் விரும்பத்தகாத நடவடிக்கைகளினால் ஈழ மக்களின் போராட்டமானது வெறும் பிரிவினைக்கான ஒரு பயங்கரவாத வெளித்தனமான போராட்டமே என்றதொரு தவறான கருத்து சர்வதேச சமுதாயத்தில் நிலவுகிறது. ஈழமக்களின் போராட்டத்தின் உண்மை நிலையை சர்வதேச சமூகத்துக்கு புரியவைப்பதோடு, சிங்கள இன மேலாதிக்கத்தின் வலிமையையும், அரச பயங்கரவாதத்தின் கொடூரங்களையும் வெளிஉலகுக்கு இனம்காட்டும் வகையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது சர்வதேச பிரச்சாரத்தை மேற்கொள்ளும் எனவும்

ஈழமக்களின் நலன்களுக்கு பாதகமான எந்தவொரு செயற்பாட்டுக்கும் எந்தவேளையிலும் உடன்பட மாட்டாது எனவும் வெற்றிகரமான இரண்டாவது காங்கிரசில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

விமர்சனம், சுயவிமர்சனம், ஜனநாயக மத்தியஸ்தம் ஆகியவற்றின் மூலம் தன்னை செழுமைப் படுத்திக்கொண்டு மக்களின் விடுதலைக்கு வேண்டி மீண்டும் மீண்டும் முன்னேற இரண்டாவது முறையும் காங்கிரசை வெற்றி கரமாக நடாத்தி முடித்த ஒரேயொரு கட்சியாக விடுதலைப் போராட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி திகழ்கிறது. காங்கிரசில் இருபத்தி மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

## பாதுகாப்பே முக்கியம் மன்னார் ஆயர்

மன்னார் புனர்வாழ்வு செயலகத்தில் மீளக் குடியேற்றங்கள் தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில், மீளக்குடியேற்றுவதைவிட, மீளக் குடியேற்றப்பட்டவர்களின் பாதுகாப்பே முக்கியமானதென மன்னார் ஆயர் ராஜப்பு ஜோசப் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அவர்களின் தொழிலைமேம்படுத்த எடுக்கும் முயற்சிகள் அவசியமானவை. இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படும் அதேவேளை மீனவர்கள் பிடிக்கும் மீன்கள், பாதுகாப்புக்கென அமர்த்தப்பட்டுள்ள படையினரால் பலாத்காரமாக அபகரிக்கப் படுவதாக புகார்கள் தெரிவிக்கப் படுகின்றன. இது வருத்தத்துக்குரியது என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## எமது கொள்கையே எமது ஆதாரம் எமது மூச்சு எமது அடிப்படை



## இரண்டாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் அறைகூவல்

அன்பிற்கினிய தோழர்களே !

இன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது இரண்டாவது காங்கிரசை நடாத்துகின்றது. என்ற விடயமே முதலில் ஒரு செய்தியைப் பறைசாற்றுகின்றது. எத்தனையோ இழப்புக்களுக்கு மத்தியிலும், எத்தனையோ அரசியல் குற்றவாழிகளுக்கும் மத்தியிலும், எவ்வளவோ கஷ்டங்கள். நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும், எமது ஸ்தாபனம் இன்றும் அன்று கொண்டிருந்த உறுதியோடு நிமிர்ந்து நிற்கின்றது. இதேபோல் எதிர்காலத்திலும் தொடர்ந்து நிற்கும், போராடும், முன்னேறும் என்பது தான் அந்தச் செய்தி.

இந்தஉறுதி எமது ஸ்தாபனத்தோடு உடன்பிறந்தது. இப்படி நான் சொல்லும்போது வெறும் வீராப்பு வசனமாக இதனை நான் சொல்லவில்லை. ஏனெனில் எமது உறுதி சூன்யத்தில் இருந்து தோன்றியது அல்ல. அதன்பின்னே ஒரு கொள்கை இருந்தது. அக் கொள்கைப்பற்றே உறுதியாக பரிணமித்தது. அதனாலேயே இன்றும் எமது கட்சி நின்று நிலைக்கின்றது. அது மாத்திரமல்ல எமது ஸ்தாபனத்தை ஏனையோரால் அழித்துவிட முடியவில்லையென்றால் அதற்கான காரணமும், எமக்கிருக்கக்கூடிய கொள்கைப் பிடிப்புத்தான். எமது ஸ்தாபனம் தனி மனிதர்களின் கூட்டமல்ல. தனி மனிதனை அழித்து விடலாம். எப்படிப்பட்ட வீரனையும் கூட இன்றைய உலகில் ஒரு சாதாரண கைத்துப்பாக்கியைக் கொண்டே அழித்துவிடலாம். ஆனால் கொள்கையினை யாராலும் அழித்துவிட முடியாது.

ஏன், தமிழீழ விடுதலைப்புலிகள் எம்மை அழித்துவிடலாம் என்ற கனவோடு எத்தனை தோழர்களை கொன்றொழித்தார்கள். இறுதியில் மிகவும் கயமைத் தனமாக எமது செயலாளர் நாயகம் தோழர். நாபாவையும் தானே கொன்று ஒழித்தார்கள். இறுதியில் அவர்கள் கண்டது என்ன? ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை இவர்களால் அழிக்க முடிந்ததா? அதன் முன்னணித் தோழர்கள் பலரை இழந்தும் இன்றும் எமது ஸ்தாபனம் ஜீவித்திருக்கின்றது. உறுதியுடன் போர்முரசறை

இரண்டாம்பக்கம் பார்க்க.....

'நாம் மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை' தோழர்.க.பத்மநாபா.

படிப்பகம்

www.padippakam.com



# எமது பார்வையில்

தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்கான அமைதித் தீர்வு என்பது இன்று வெறும் அர்த்தமற்ற பேச்சாகிவிட்டது. நம்பிக்கையின் இறுதிமூச்சை இழுத்துப் பிடிக்க வைத்த சர்வகட்சிப் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகளும் நம்பிக்கையை சவப்பெட்டிக்குள் வைத்து ஆணியையும் அடிப்பதாகவே அமைந்துள்ளது.

ஆயரின் பயணம் கூட பத்திரிகைகளில் பரபரப்பை உண்டாக்க உதவியதே ஒழிய மரணத்தோடு போராடும் தமிழ்பேசும் மக்களுக்கு எந்த பலனையும் கொடுக்கவில்லை.

தேசத்தின் ஒருபுறத்தில் தான் நிகழ்த்தும் கோரப் படுகொலைகளிலிருந்து தென்னிலங்கை மக்களின் கவனத்தை திருப்பும் வகையில் பிரேமதாசா இலவச சீருடை, தொகுதிகள் தோறும் தொழிற்சாலைகள், வீடமைப்புத் திட்டங்கள் என்றெல்லாம் சித்து விளையாட்டுக் காட்டுகிறார்.

சமாதானம் பேசிக்கொண்டே ஆஜென்ரைனாவிலிருந்தும், செக்கோஸ்லவாக்கியாவிலிருந்தும் போர் விமானங்களையும் நவீன ரக ஆயுதங்களையும் வாங்கிக் குவித்து தமிழ்பேசும் மக்கள் மீது பாரிய இனப்படுகொலையை தொடர்கிறார்.

தமிழ்பேசும் மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் தடை செய்து கிளாலியில் மரணப் பாதை அமைத்து தமிழ்பேசும் மக்களை பட்டினிச் சாவுக்கும் பல்வேறு நோய்களுக்கும் உள்ளாக்கிவரும் பிரேமதாசாவின் அரசு தமிழ்பேசும் மக்கள் அடித்து விரட்டப்பட்ட இடங்களிலெல்லாம் இராணுவப் பாதுகாப்புடன் சிங்களக் குடியேற்றங்களை தங்கு தடையின்றி அமைத்து வருகின்றது. கிழக்கில் பல இடங்களில் தமிழ்மக்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது வெறும் வரலாறாகப் போய்விட்டது.

அரசாங்கத்தின் போக்கு மாத்திரமல்ல இடதுசாரி, வலதுசாரி... முற்போக்கு பிற்போக்கு... பேதங்கள், பிரிவுகள் அனைத்தையும்மீறி "தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகள் கொடுக்கக் கூடாது" என்பதிலும் இனப்பிரச்சனைக்கான தீர்வு இழுத்தடிக்கப்படவேண்டும் என்பதிலும் பெரம்பான்மையான சிங்களக் கட்சிகள் ஒன்றாகவே நிற்கின்றன.

சிங்களக் கட்சிகள் இப்படியென்றால், பிரேமதாசாவின் காலடிகளே சரணம் என்று நிற்கும் சில தமிழ் அமைப்புக்கள் இன்னும் ஒருபடி பங்கு மேலேபோய் பிரேமதாசாவினால் மட்டுமே இனப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும் என்ற மந்திரத்தை தினமும் ஜெயிப்பதுடன் அரச படையினர் அப்பாவி தமிழ்பேசும் மக்களை கொன்று குவிக்கும் போதெல்லாம் அவர்கள் அப்பாவி மக்கள் அல்ல புலிகளே என்று அடித்து சத்தியம் செய்து தமது எஜமான விசுவாசத்தைக் காட்டிவருகின்றன.

இதற்கிடையில் தாங்களே தமிழ்பேசும் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்றும் கல் தோன்ற முன்தோன்றிய மூத்த கொரில்லா இயக்கம் என்று கூறிவரும் விடுதலைப் புலிகளோ தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் குறித்து நிலைப்பாடு எதுவும் எடுக்க முடியாதவர்களாய்... திட்டம் எதையும் வகுக்க முடியாதவர்களாய் வெளிநாடு ஒன்றிலிருந்து "சமாதான திட்டத்தை (?)" கள்ளமாய் ஆயுதங்களுடன் கடத்த முனைந்த செய்தியும் வந்திருக்கிறது.

தேவையேற்பட்ட நேரங்களில் சமாதான முகமூடிகளையும் தேவையான நேரங்களில் யுத்தப்பறைகளையும் தரிப்பது விடுதலைப்புலிகளுக்கு கைவந்தகலை. பி.பி.சிக்கு சமஷ்டி குறித்து பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தலைவர் பேட்டிகொடுப்பார். ஆனால் யாழ்ப்பாணத்தில் மூளைச் சலவை செய்யப்பட்ட சிறுசுகளிடம் எத்தனை உயிர்கள் போனாலும் தமிழீழமே நமது தாரகமந்திரம் என்பார்.

ஒவ்வொரு முறையும் தென்னிலங்கையிலிருந்து சமாதானத் தூதுவர்கள் வரும்போது தாம் கைதுசெய்த அரச இராணுவத்தினரையும் பொலிசாரையும் விடுதலை செய்யும் புலிகள், தாம் கைதுசெய்த இதர அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையோ, பல்கலைக் கழக மாணவர்களையோ, முற்போக்குவாதிகளையோ, முஸ்லீம்களையோ விடுதலை செய்வதில்லை.

இந்தநிலையில் புகலிடத்தில் வாழும் நாம் வெறும் வறட்டுச் சித்தாந்தங்களையும், நான் பெரிதா நீ பெரிதா விவாதங்களையும் இன்றும் இறுகப் பற்றியிருப்பது கேவலமானது. உலகின் மாற்றங்களை உணர்ந்து கொண்டு அதற்கேப்ப எமது இனப்பிரச்சனைக்கான சரியான ஒரு தீர்வையும் அதற்கான சர்வ தேச ஆதரவையும் வெல்லவேண்டும். இது புகலிடத்தில் உள்ளவர்களால் முடியும்.

இன்று புகலிடத்தில் ஏற்பட்டுவரும் அரசியல் பொருளாதார நெருக்குவாரங்கள் நாளை இங்கும் ஒரு மிக மோசமான பிரச்சனையை ஏற்படுத்தும். எங்கள் மண்ணில் நாம் வாழவேண்டுமாயின் எரியும் பிரச்சனைக்கான உடனடித் தீர்வொன்றை நாம் உலக அரங்கில் சமர்ப்பிக்க வேண்டும்.

## எமது கொள்கையே......

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கின்றதென்றால் அதன் அடிப்படை என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

அதுதான் வரலாற்றின் இயக்கவிதிகளைப் புரிந்துகொள்ளாத இத்தகைய பாசிசவாதிகளையும் திகைக்கவைக்கின்ற மர்மம். ஒரு கொள்ளைக் கூட்டத் தலைவனை அழித்து விடுவதால் அந்தக் கொள்ளைக்கூட்டத்தினையே அழித்துவிடலாம். ஆனால் ஒரு இயக்கத்தின் தலைவனை அழித்துவிடுவதால் அந்த இயக்கத்தை அழித்து விட முடியாது. ஏனெனில் கொள்ளைக் கூட்டத்திற்கு ஒரு கொள்கை கிடையாது. ஆனால் ஒரு விடுதலை இயக்கத்திற்கு உறுதியான கொள்கை இருக்கின்றது. அதுதான் எமது ஆதாரம். எமது மூச்சு. எமது அடிப்படை.

தோழர்களே அத்தனை சக்திவாய்ந்த ஒரு ஆதார சுருதியாக எமது கொள்கை உள்ளதென்றால் அதற்குக் காரணம் அது மாளுட வர்க்கத்தின் விடுதலையுடன் பின்னிப்பிணைந்ததாய் அமைந்திருப்பதுடன் இதுவரை காலமும் மாளுட வர்க்கத்தின் போராட்டத்தில் தொடர்ச்சியாக அது அமைந்திருப்பது தான். ஒரு நாட்டில் ஒரு மக்கள் தொகையின் பிரத்தியேகமான சில பிரச்சனைகளில் இருந்து எழுந்த போராட்டத்தை சர்வ வியாபகமான மாளுடவர்க்கத்தின் விடுதலையுடன் இணைத்துச் செல்லக்கூடிய ஓர் ஆழமான பார்வை எமக்கிருந்தது. அதேவேளை எமது போராட்டத்தின் பிரத்தியேகத் தன்மைகளை இனம்கண்டு, அதற்கென ஓர் தனித்துவமான வடிவத்தையும் கொடுக்க எம்மால் முடிந்தது. அது மாத்திரமல்ல. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப, சர்வதேச நிலைமைகளுக்கேற்ப, எமது போராட்ட வடிவங்களை மாற்றியமைத்துச் செல்லக்கூடிய நுட்பத்தை இந்தப் பார்வை எமக்களித்திருந்தது.

இந்தப் பார்வை தான் தேசிய இனப்பிரச்சனையாக உருவெடுத்த எமது போராட்டத்துள் சமூக பொருளாதார விடுதலைக்கான அடித்தளங்களை இட வழிகாட்டியது. சமூக, பொருளாதார விடுதலை என்ற கருத்து வறட்டுச் சூத்திரமாகி, நடைமுறையில் பாராதூரமான ஒன்றாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில் இனப்பிரச்சனையிலிருந்து அந்நியப்பட்டு ஒதுங்கிப்போய் விடக்கூடாது என்பது ஒரு பக்கத்திலும், இன விடுதலைப் போராட்டம் என்ற போக்கு ஒரு பக்கமாக இழுபட்டுச் சென்று இனவெறியாகவும், வெறும் பழிவாங்கல் நடவடிக்கைகளாகவும், அவலட்சணமாகி விடக்கூடாது என்பது மறுபக்கத்திலும் எம்மால் வலியுறுத்தப்பட்டுவந்தது. இதனடிப்படையில் நாம் வகுத்திருந்த பாதைதான் எம்மை இவ்விருவகையான எல்லைகளுக்கும் இட்டுச்செல்லாமல் சரியான நிலைப்பாட்டில் வைத்திருந்தது.

தோழர்களே நாம் எமது இரண்டாவது காங்கிரசை நடாத்துகின்ற வேளையிலே, நாம் கொண்டிருக்கின்ற உறுதியினை இட்டு பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்த வேளையிலே, எமக்கு முன்னால் இருக்கக்கூடிய பணிகளை மிகுந்த சிரத்தையுடன் இங்கு ஆராயவேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். இந்தக் கடமையை இதுவரை கால அனுபவத்திலும், அறிவினதும் துணையுடன், ஒரு கூட்டு உழைப்பின் மூலம் தோழர்களாகிய நீங்கள் யாவருமாக இனிதே நிறைவேற்றி காங்கிரசை வெற்றிகரமாக முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எமது காங்கிரசின் வெற்றியில் எமது ஸ்தாபனத்தின் எதிர்கால வெற்றிகளும் எமதுமக்களின் விடிவுக்கான எதிர்பார்ப்புகளும் அடங்கியிருக்கின்றன என்ற பொறுப்புணர்ச்சியுடனேயே எமது தோழர்கள் அனைவரும் சிந்தித்துப் பார்ப்பார்கள் என்ற அசையாத நம்பிக்கையுடன் இந்தக் காங்கிரஸ் ஆரம்பமாகின்றது.

## சுயாட்சி அதிகாரங்களுக்காக எங்கள் ஆதரவு உங்களுக்கு என்றும் உண்டு

### இந்திய கம்யூனிஸ்ட்(மாக்சிஸ்ட்)கட்சி வாழ்த்து

ஈ.பி.ஆர்.எல்.எவ். பின் இரண்டாவது காங்கிரஸ் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள செய்திகேட்டு மிக்கமகிழ்ச்சியடைந்தேன். உங்கள் மாநாடு வெற்றிபெற எனது இதயபூர்வமான புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

என இந்திய கம்யூனிஸ்ட் (மாக்ஸிஸ்ட்) கட்சி சார்பில் தமிழ்மாநிலக் குழு செயலாளர் தோழர்.ஏ. நல்லசிவன் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உங்கள் அமைப்பு ஆரம்பித்தகாலம் முதல் பல்வேறு சோதனைகளைத் தாங்கிவந்துள்ளீர்கள். உங்கள் கட்சித்தளபதி தோழர்.பத்மநாபா மற்றும் முன்னணித் தலைவர்களை சில ஆண்டுகளுக்கு முன் மிக கொடூரமானதாக்குதல்களில் இழந்தபோதிலும், மனம் தளராது ஒற்றுமையுடன் கட்சியை கட்டிக்காத்து நடாத்தி வருகிறீர்கள் என்பதைக்கண்டு பெருமிதமடைகிறேன்.

ஒன்றுபட்ட சமஷ்டி இலங்கைக்குள் தமிழர்வாழும் வட-கிழக்கு பகுதிகளுக்கு சுயாட்சி அதிகாரங்கள் என்ற உயரிய லட்சியத்துடன் நீங்கள் மேற்கொண்டு வரும் அனைத்து போராட்டங்களுக்கும் எங்கள் பூரண ஆதரவு உண்டு என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை இனவாதிகளின் தாக்குதல் ஒரு பக்கமும், விடுதலைப் புலிகளின் தாக்குதல் மறுபக்கமும் இருந்த போதிலும் இலங்கை தமிழர் உரிமைக்காக, பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து ஒன்றுபட்ட அமைப்பாக, லட்சியத்தினை அடைய மனந்தளராது பாடுபட வேண்டுகிறேன்.

உங்கள் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் வெற்றியடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் எனது சார்பிலும் மீண்டும் ஒரு முறை புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே

தமிழ்பேசும் மக்கள் மிகவும் நெருக்கடிகளுக்குள்ளும் குழப்பமான அரசியல் சூழ்நிலைகளுக்குள்ளும் அகப்பட்டிருக்கும் காலகட்டம் இது. இருபக்க எதிரிகளுக்கு நடுவில் அகப்பட்டு விழிபிதுங்கி செய்வதறியாது திகைத்து நிற்கும் மக்கள் கடந்த காலங்களை அசைபோட்டுக் கொள்ளும்போது அமைதி, சமாதானம் ஏற்பட, சகஜவாழ்வு திரும்ப, ஜனநாயக சூழல் ஏற்பட, தமிழ் பேசும் மக்களின் முழுமையான விடுதலையை வென்றிட ஆரம்பப் படியாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் தோற்றுவித்த மாகாண அரசை நினைவு கூர்ந்து மனதுக்குள் வெதும்புகின்றனர்.

உள்ளதை இழந்துவிட்டோம். இப்போது இழப்பதற்கு எதுவுமே இல்லாதவர்களாகி விட்டோம். எங்களைக் காப்பாற்ற யார் வருவார்கள் என தமிழ்பேசும் மக்கள் வழிமேல் விழிவைத்து காத்திருக்கும் இவ்வேளையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் மேலும் மேலும் நிமிர்ந்து நின்று எமது இரண்டாவது காங்கிரசை வெற்றிப் பெருமிதத்துடன் நடாத்தி முடித்துள்ளோம்.

கடந்தசில ஆண்டுகளாக நாம் எதிர்நோக்கிய அனைத்து நெருக்கடிகளின் மத்தியிலும் கட்டுக்குலையாது, கட்டுப்பாடு குறையாது செயற்பட்டு வருவதை எமது எதிரிகள் தாங்கிக் கொள்ள முடியாமல், நேரடியாகவும், மறைமுகமாகவும் வெட்கம் கெட்ட கூட்டுக்களைச் சேர்த்துக் கொள்ளவும், தயங்காமல் எமக்கெதிராகச் செயற்படுவதிலும் மிக முனைப்பாக இருந்து வருகிறார்கள்.

நாம் இத்தனை இடர்களுக்கு மத்தியிலும் சிறிதளவேனும் கடம்பாளாகு எமது நண்பர்கள் யார்? எமது எதிரிகள் யார்? என்பதை புரிந்து கொண்டு மிகத் தெளிவோடும் உறுதி குலையாமலும் செயற்பட்டு வந்துள்ளோம் என்பதைக் கூறும்போது பெருமைப் படுகிறோம்.

பல வெற்றிகளையும், தோல்விகளையும், சோதனைகளையும் சந்தித்தபோதும் கடந்து வந்த பாதையில் நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பேரம் பேசும் அரசியலில் அல்லது எமது மக்களினதும், சொந்த தேசத்தினதும் நலன்களை விலைபேசும் அரசியலிலும் ஈடுபட்டவர்கள் அல்ல.

தமிழ்பேசும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகவோ, மக்களின் அடிப்படை அபிலாசைகளுக்கு விரோதமாகவோ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் என்றும் செயற்பட்டதில்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு இடங்களில் நிலவும் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப முரண்பாடானதும், குழப்பமானதுமான கொள்கை நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் கட்சியாக நாம் இருக்கவில்லை.

ஆரம்பக் கட்டங்களில் எமது வளர்ச்சியைக் கண்டு பொறுக்கமுடியாத பலர் எம்மை கம்யூனிஸ்ட்டுக்கள் என்றும், சிங்களவர்களுடன் சேர்ந்தவர்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் கட்சி என்றும் எல்லா வகைப்பட்ட கொச்சைத்தன பிரச்சாரங்களை பச்சைத்தனமாக கட்டவிழ்த்துவிட்டனர். நாம் இவைகளைக்கண்டு ஓடி ஒளிந்து விடவில்லை. மாறாக அனைத்து சேறடிப்புகளையும் எதிர்கொண்டு துணிச்சல்கரமாக முன்னோக்கி நடைபோட்டு உங்கள் முன்னால் நிமிர்ந்து உங்களுடன், உங்களுக்கு தோள்கொடுத்து நிற்கிறோம்.

நாம் ஜனநாயகரீதியான கோட்பாடுகளுக்கும், நாகரீகமான மானுடப்பண்புகளுக்கும், அரசியல் சித்தாந்த ரீதியான ஈடுபாடுகளுக்கும் எம்மை எப்போதும் தவறாது ஈடுபடுத்தி வந்துள்ளோம். இதனாலேயே சொந்த உறுப்பினர்களையே படுகொலை செய்யும் அல்லது சித்திரவதை செய்யும் பழி எதற்கும் எந்தவொரு அளவிலும் ஆளாகாமல், சொந்த உறுப்பினர்கள் மீது உட்பட கொலைகளும், சித்திரவதைகளும் மலிந்த ஈழப்போராட்ட இயக்கங்களின் வரலாற்றில் தனித்துவமாக இருந்துவர முடிந்தது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

மக்களுக்காக நாம் ஒரு நடவடிக்கையை மேற்கொள்கிறபோது, அந்நடவடிக்கைகள் என்னதான் அவசிய, அவசர காரணங்களைக் கொண்டிருப்பினும், அதுதொடர்பாக பெரும்பான்மையான மக்கள் புரிந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லாதவிடத்து நாம் மேற்கொள்ளும் அவ்வாறான நடவடிக்கைகள் எமக்கு எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை நாம் கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டோம்.

**உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும், எமது கடந்த கால அனுபவங்களையும் கணக்கில் கொண்டு, நாம் கொண்டுள்ள இலட்சியங்களில், கொள்கைகளிலிருந்து சிறிதேனும் தடம்புரளாது, குழப்பமடையாது, வரட்டுக்கோஷங்களை உயர்த்திப்பிடிக்காது மிகத்தெளிவுடனும், உறுதியுடனும் மக்கள் நலன்களை ஜதார்த்தத்தின் அடிப்படையிலேயே வென்றிட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் உழைப்போம்.**

இன்றைய எமது மக்களின் நிலை என்ன? அரசியல் தீர்வு எதனைப் பற்றியும் சிந்திக்கத் தயாராக இல்லாத நிலையாகும். அரசியல் தீர்வு என்று வெறும் சமாதானம் மட்டும் என்றும் இருந்தால் மட்டுமே போதுமானது என்பதே மக்களின் நிலை.

ஆனால் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணம், மாகாண அரசுக்கான தெளிவான அதிகாரப் பரவலாக்கல்கள், சிங்களக் குடியேற்றங்கள், சிங்களவரைமட்டுமே கொண்ட அரச ஆயுதப்படைகள் ஆகியவை தொடர்பான திட்டவட்டமான அரசியல் தீர்வுகளை சிறீலங்கா அரசுடன் காணாமல், சமாதானம் என்பது வெறுமனே கூட ஏற்பட முடியாது என்பதை தொகுத்து உணர்ந்து பார்க்கக்கூடிய நிலையில் எமது மக்கள் இன்று இல்லை.

ஆனால் இவை தொடர்பான தெளிவான புரிதல்களை எமது மக்களுக்கு வழங்க வேண்டிய கடமைகளும், மறுபுறம் இவை தொடர்பாக சரியான அரசியல் நிலைப்பாடுகளை எடுத்து செயற்பட வேண்டிய கடமைகளும் பொறுப்பும் எமக்கு உண்டு என்பதனை நாம் உணர்கிறோம்.

சிறீலங்கா அரசானது ஒவ்வொரு இனங்களையும் ஒன்றுக்கெதிராக ஒன்றை நிறுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாள்கிறது. ஒவ்வொரு இனங்களுக்குள்ளும் உள்ள வெவ்வேறு அரசியல்களையும், சமூக முரண்பாடுகளையும் ஒன்றுக்கெதிராக இன்னொன்றை நிறுத்தியும் மிக நுட்பமாக செயற்பட்டு வருகிறது. இவற்றை கணக்கில் கொண்டே நாம் இனங்களுக்கு இடையேயான உறவுகளையும், ஐக்கியத்தையும் பேணிக்காத்திட அரும்பாடுபட்டு செயற்பட்டு வருகிறோம்.

உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும், எமது கடந்தகால அனுபவங்களையும் கணக்கில் கொண்டு, நாம் கொண்டுள்ள இலட்சியங்களில், கொள்கைகளிலிருந்து சிறிதேனும் தடம்புரளாது, குழப்பமடையாது, வரட்டு கோஷங்களை உயர்த்திப் பிடிக்காது மிகத் தெளிவுடனும் உறுதியுடனும் மக்கள் நலன்களை ஜதார்த்தங்களின் அடிப்படையிலேயே வென்றிட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் தொடர்ந்தும் உழைப்போம்.

புரட்சி என்பது ஒரு கலை. அதனை வெறுமனே பழிவாங்கும் எண்ணங்களாலோ, உணர்ச்சிகளினாலோ நிறைவேற்றமுடியாது. ஜதார்த்த பூர்வமான கணிப்பீடுகளினாலும் அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் உணர்வு பூர்வமான செயற்பாடுகளினாலுமே சாதிக்க முடியும் என்பதனை ஒவ்வொரு கணமும் மனதில்வைத்தே நாம்செயற்பட்டு வந்துள்ளோம் இனியும் செயற்படுவோம்.

எமது மக்களுக்குவேண்டி சமாதானபூர்வமான முறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்காக எடுக்கப்படும் எந்தவொரு முயற்சிக்கும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்கி அவ்வழிமுறையில் தக்கபூர்வமாக செயற்படுவோம்.

அதேவேளை சிறீலங்கா அரசானது பேச்சுவார்த்தை என்னும் வழிமுறையை தனது இராணுவ நோக்கங்களுக்காகவே பயன்படுத்தி வருகின்ற விடயத்தை தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் அம்பலப்படுத்தும் கடமையை நாம் மிக உரமாகவும், பரந்தரீதியிலும், விடாப்பிடியாகவும் மேற்கொள்வதோடு, பேச்சுவார்த்தை வழிமுறையை ஆக்கபூர்வமானதாக ஆக்குவதற்கு உரியவகையில் முற்போக்கு ஜனநாயக சக்திகளை அணிதிரட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சனைகளில் தலையானது சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பான விடயங்களே. சிங்களக் குடியேற்றங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களின் ஒருங்கிணைப்பையும், ஒருமைப்பாட்டையும் துண்டாடுகின்றன. தமிழ்பேசும் மக்களின் அடிப்படைப் பொருளாதார வளங்களையும் வாய்ப்புக்களையும் பறித்தெடுக்கின்றன.

தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களில் இதுகாலவரை நடாத்தப்பட்டுள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு திட்டவட்டமான அரசியல் தீர்வு காணப்படாமல், இலங்கையில் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதென்பது எவராலும் எந்த வேளையிலும் சாத்தியமாகாத விடயம் என்பதில் நாம் தெளிவோடுள்ளோம். இதற்குவேண்டி உறுதியோடு விடாப்பிடியாக எம்மாலான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் மேற்கொள்வோம்.

மலையக மக்களை ஒரு தனித்துவமான சமூகமாகவும் ஈழத்து மக்களிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதியினராகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் அடையாளம் காண்கிறோம்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒரு நியாயபூர்வமான அரசியல் தீர்வு ஈழமக்கள் அனைவருக்கும் சாத்தியப்படுமாயின் மலையக மக்களை செறிவாகக் கொண்ட பகுதிகளை நிலரீதியிலும், நிர்வாகரீதியிலும் ஒருங்கிணைத்து பாதுகாப்பு, பொருளாதார, சமூகவளர்ச்சி மற்றும் அடிப்படை விடயங்களில் சுயாட்சி கொண்ட அல்லது அதற்கு சமனான அரசமைப்பு உருவாகவேண்டும் என்பதனை வற்புறுத்துவதோடு அதற்காக உறுதியாக உழைப்போம்

முஸ்லீம் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வை முதன்முதலில் எமது முதலாவது காங்கிரசினால் வெளியிடப்பட்ட அரசியல் திட்டத்தில் முன்வைத்தவர்கள் நாம். வடக்கு கிழக்கு மாகாணத்தின் பாரம்பரியத் தொடர்ச்சியை துண்டாடாத வகையில் அப் பிரதேசத்தின் அரச எல்லைக்குள்ளேயும் வெளியேயும் முஸ்லீம்களுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை, ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஈழமக்களுக்கு ஒரு நியாயபூர்வமான அரசியல்தீர்வு சாத்தியப்படுமிடத்து ஏற்படுத்த வேண்டும் என்பதை நாம் வற்புறுத்துகிறோம். அதே வேளை முஸ்லீம் மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கான தீர்வை எட்டுவதற்கு எந்தவித சந்தேகங்களுக்கு இடமின்றி உழைப்போம்.

தமிழ்பேசும் மக்கள் சிறீலங்கா அரசின் மேலாதிக்கத்திற்கும், புலிகளின் பாசிசத்துக்கும் மத்தியில் சிக்குண்டு தவிக்கிறார்கள். இந்நிலையில் சிறீலங்கா அரசுடனான முரண்பாடு முதன்மையானது என்பதிலும், புலிகளுடனான முரண்பாடு இரண்டாவது நிலையானது என்பதிலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் மிகத் தெளிவாக உள்ளோம். அதேவேளை சிறீலங்கா அரசும், புலிகளும் ஈழமக்களின் விரோத சக்திகளே என்பதையும் அவற்றில் ஒன்றோடு சமரசம் செய்துகொண்டு மற்றதற்கு எதிராக செயற்பட முடியாது என்பதையும் நாம் மிகத்தெளிவாக உணர்ந்துள்ளோம்.

அரசியல் உடன்பாடுகள் என்பன ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சம்பந்தப்பட்ட சக்திகளுக்கிடையே ஏற்படக்கூடிய கூட்டு உறவுகளினாலும், சமபல அடிப்படையின் மூலமுமே இறுதியாக தீர்மானிக்கப்பட முடியும் என்பதை நாம் நன்றாக அறிந்துள்ளோம்.

இருந்த போதிலும் எமது சித்தாந்த விழுமியங்களையும், பெறுமானங்களையும் ஒருபோதும் விட்டுக்கொடுக்கவோ, அல்லது ஈழமக்களின் நலன்களுக்கு பாதகமான எந்தவொரு செயற்பாட்டுக்கும் உடன்படவோ மாட்டோம். நாம் எமக்காகவோ அல்லது எமது உறுப்பினர்களுக்காகவோ செயற்படவில்லை. நாம் மக்களுக்காகவே செயற்படுகிறோம். எமது முன்னேற்றப் பயணமானது சுலபமானதாகவோ அல்லது நேர்பாதை கொண்டதாகவோ இருக்காது என்பதனை நாம் முற்றுமுழுதாக உணர்ந்துள்ளோம்.

நாம் பல பின்னடைவுகளையும், தடங்கல்களையும் சந்திக்க நேரிடலாம். ஆனால் நாம் எமது இலட்சியத்திலும், இறுதிக் குறிக்கோளிலும் இருந்து எமது பார்வையை ஒருபோதும் விலக்கிக்கொள்ள மாட்டோம். இவ்விடயத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னேற்றத்துக்காகவும் ஒவ்வொரு உறுப்பினரும் எந்தவித துன்பங்களையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ள எப்போதும் தயாராக உள்ளோம்.

படிப்பகம்

www.padippakam.com



# அனைத்துத் தடைகளையும் தாண்டி எழுச்சிமிகு காங்கிரசில் வேகமாக...



அணிவகுப்பு மரியாதையின் ஒரு பகுதி.



மறைந்ததோழர்களின் நினைவாக.



மறைந்ததோழர்கள் மறக்கப்பட்டவர்கள் அல்ல அவர்களின் இலட்சியங்களைத் தாங்கியபடி.....



மறைந்ததோழர்களின் அஞ்சலிக்கு காங்கிரஸ் பிரதிநிதிகள்.



முதலாவது காங்கிரசில்(ஆனி1984) செயலாளர்நாயகம் தோழர்.க. பத்மநாபா அவர்கள் உரையாற்றுகிறார்.



செயலாளர்நாயகம் மறைந்ததோழர்களுக்கு அஞ்சலிசெலுத்துகிறார்.



செயலாளர்நாயகம் கொடிஏற்றுகிறார்.



பாசமிகுதோழர் பத்மநாபா நினைவாக காங்கிரஸ் அரங்கம்.




தோழர்.ஐயா நினைவாக......



இரண்டாவது காங்கிரசில்(05.2.1993) செயலாளர் நாயகம் தோழர்.க.பிரேமச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகிறார்.



மத்தியகுழுசார்பில் செயலாளர்நாயகம் வாசிக்கும் ஸ்தாபன அறிக்கையை பிரதிநிதிகள் செவிமடுக்கின்றனர்.



காங்கிரஸ் அரங்குள் பிரதிநிதிகளின் ஒரு பகுதியினர்.



வாக்கெடுப்பில் காங்கிரஸ் பிரதிநிதிகள்.







காங்கிரசுக்கு முன்பாக நடைபெற்ற பிராந்திய மாநாடுகளில் சில......

www.padippakam.com



# காங்கிரஸ் கண்ணோட்டம்

அரவிந், சென்னை

ஈ.பி.ஆர்.எல்.எவ். என அழைக்கப்படும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது இரண்டாவது காங்கிரசை சென்னையில் 5.2. 93 முதல் 9.2.93 வரை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளது. காங்கிரஸ் என்பது என்ன ? காங்கிரஸ் எதனை சாதிக்கிறது ? என்பதனை எல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் காங்கிரசில் காணக்கூடியதாய் இருந்தது.

ஈழத்தமிழரின் போராட்டத்தில் ஈழத்தீவுக்காக போராடியபோது கட்சியின் உறுப்பினர்களைக் கொண்டு காங்கிரசினை நடாத்தி தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய ஒரே ஒரு கட்சி ஈ.பி.ஆர். எல். எவ், தான். ஈழம் தொடர்பான அரசியல் திட்டத்தை வரைந்து, அதனை காங்கிரசில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் விவாதித்து திருத்தி செழுமைப்படுத்தி வெளியிட்ட பெருமையும் அவர்களுக்கு மட்டுமே தான் உண்டு. தமது நண்பர்கள் யார்? எதிரிகள் யார் ? தமது பாதை என்ன? தமது கொள்கை என்ன ? தமது சர்வதேச உறவுகள் என்ன? இந்தியாவுடனான உறவு எப்படி? என்றெல்லாம் தெட்டத்தெளிவாக கூறியவர்கள்.

தமது இரண்டாவது காங்கிரசை குட்ட முயற்சிகள் செய்து, சர்வதேசவாதியும் தென்னாசியாவிலே சிறந்த இடது சாரித் தலைவருமான தோழர் பத்மநாபாவையும் சகாக்கள் பன்னிருவரையும் பலி கொடுத்தனர். ஆனாலும் அவர்கள் ஓடி ஒளிந்து விடவில்லை.

இப்போது மீண்டும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமது இரண்டாவது காங்கிரசை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார்கள்.

காங்கிரசுக்கு முன்பாக பிராந்திய மாநாடுகளை நடாத்தினார்கள். கட்சி உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிராந்திய உறுப்பினர்கள், மட்டக்களப்பு, வவுனியா மலையகம், திருகோணமலை யாழ்ப்பாணம் என பிராந்திய மாநாடுகளை நடாத்தினர் இதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே காங்கிரசில் கலந்துகொண்டனர்

காங்கிரசின் ஆரம்பநிகழ்ச்சிகளில் மறைந்த தோழர்களுக்கான அஞ்சலி மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்பாக மரியாதை செலுத்த காங்கிரஸ் பிரதிநிதிகள் நின்றிருந்தனர். மத்திய குழு உறுப்பினர்களும், செயலாளர் தோழர். பிரேமச்சந்திரனும் மாலைகள் அணிவித்து அழைத்துவரப்பட்டனர் செயலாளர் நாயகம் மறைந்த தோழர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த சமாதிக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். நின்றிருந்த அனைத்து காங்கிரஸ் தோழர்களும் தமது சிவப்பு வணக்கத்தை தெரிவித்தனர். அமைதியாக அவர்கள்நின்று வணக்கம் செலுத்திய விதம் மறைந்த தோழர்களின் சமாதிகளே ஆராதனைக்குரிய தேவாலயங்கள் என்பதை நிரூபித்தது.

செயலாளர் நாயகம் கட்சிக்கொடி ஏற்றினார். பின்பு காங்கிரஸ் அரங்குக்குள் சென்றனர். அரங்கின் வெளிவாயிலில் பத்மநாபா அரங்கம் என்று பொறிக்கப்பட்டிருந்தது. அரங்கத்துள் மறைந்த முன்னணித் தோழர்கள் இருபுறமும் இருக்க நடுநாயகமாக தோழர் நாபா போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தார்.

பழைய மத்திய குழுவின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட, காங்கிரசை நடாத்திவருவ தற்காலிக தலைமைக்குழுவை செயலாளர் நாயகம் வாசித்து அவர்களை காங்கிரசைநடாத்தித்தருமாறு வேண்டிக் கொண்டனர். காங்கிரஸ் ஆரம்பமானது. தேசிய விடுதலை சிங்களக் குடியேற்றங்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள், பெண் விடுதலை, தென்னிலங்கை கட்சிகள், தமிழ் முஸ்லீம் கட்சிகள், இந்தியாவுடனான உறவு; சர்வதேச உறவு, சமூக மாற்றத்துக்கான முன்னெடுப்புகள் என பல விடயங்கள் விவாதத்துக்கு வந்தன.

இன்றைய ஜதார்த்த சூழ்நிலைக்கேற்ப புனர்வாழ்வு வேலைகள், சிங்களக் குடியேற்றம், முஸ்லீம் மக்கள் நிலைப்பாடு, போன்றவற்றுக்கு எதிர்கால திட்டங்களில் முக்கியத்துவம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இக்காங்கிரசில் குறைவான பெண் தோழர்கள் கலந்துகொண்டமை ஒரு குறைபாடாகும் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுதம் ஏந்தி பொது எதிரிக் கெதிராக போராடி மரணித்த முதல் பெண்போராளி ஷோபா ஈ.பி.ஆர்.எல்.எவ். ஐ சேர்ந்தவர். இவர்களின் பெண்கள் அமைப்பு நடாத்திய போராட்டங்கள், தீப்பந்த ஊர்வலங்கள், அரசியல் நடவடிக்கைகள் பல தாக்கங்களை ஈழத்தமிழர் போராட்டத்தில் ஏற்படுத்தி உள்ளது. ஆகவே இதில் இவர்கள் கவனமெடுப்பது அவசியம்.

இன்றைய அரசியல் சூழ்நிலைகளுக்கு தக்கவாறு அரசியல் திட்டமொன்றை தயாரித்து விவாதித்துள்ளார்கள். கட்சி யாப்பு ஒன்றை தயாரித்து செழுமைப்படுத்தி உள்ளார்கள். காங்கிரஸ் முடிவில் இருபத்திமூன்று தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

தோழர்கள் பேணிக்கொண்ட ஒழுங்கு, விவாதங்களில் இருந்த ஆரோக்கியமான தன்மை, மக்களை முன்னிலைப்படுத்தியமை, தங்களை சுய விமர்சனம் செய்து கொண்ட விதம். ஏனையவர்களை விமர்சனம் செய்து கொண்ட நாகரீகம். விவாதங்களில் கலந்து கொள்ள அலுக்காது உற்சாகமாக கலந்து கொண்டதோடு குழுவாதமாக, பிரதேச வாதமாக பிரிந்துநில்லாத சிறப்பு போன்றவை, ஈழத் தமிழர்களுக்கான சரியான, திறமையான தலைமை ஈ.பி.ஆர்.எல்.எவ். தான் என்பதை பறைசாற்றி நிற்கிறது. நாங்கள் ஈ.பி. ஆர் எல்.எவ். இனர். நாங்கள் மக்களுக்காக போராடுபவர்கள். என ஆயிரமாயிரம் தோழர்களினால் பிரதிநிதிப்படுத்தப்பட்ட இந்தக் காங்கிரஸ் தோழர்கள், உண்மைக்கு, நேர்மைக்குஎடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள்

பொது எதிரியான சிறிலங்கா அரசிடம் சரணடையாத தன்மை. புலிகளின் பாசிச நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கும் பாங்கு, தாம் விட்ட பிழைகளை எங்கே விட்டோம், ஏன் விட்டோம், எப்படி நடந்தது. எதிர்காலத்தில் எப்படி திருத்திக் கொள்ளவேண்டும் என தங்களை தாங்களே திருப்பிப் பார்த்து திருத்திக்கொள்ளும் திறமை. எதிர்கால திட்டங்களை வகுப்பதில் உள்ள நிதானம் தெளிவு என்பவற்றை இவர்களிடம் காண்பதானது இவர்களை யார் என அடையாளம் காட்டி நிற்கிறது.

## சர்வதேச தலையீடுவேண்டும்

குமார் பொன்னம்பலம்

இந்நாட்டில் வாழ்பவர்கள் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்கமாட்டார்கள் என இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு குறித்தான பேச்சு ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது இந்நாட்டில் வாழ்பவர்கள் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்க்க மாட்டார்கள். தீர்க்கவும் முடியாது. இபிரச்சனையை தீர்ப்பதானால் அந்நிய நாட்டின் அல்லது நாடுகளின் நேரடித்தலையீட்டின் நிமித்தம் அல்லது சமரசமுயற்சியின் மூலம்தான் இனிமேல் எமது இனப்பிரச்சனையை தீர்க்க முடியுமென தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது காங்கிரசில் பங்குபற்றிய பிரதிநிதிகள் பற்றிய விபரம்

| | | விகிதம் |
|---|---|---|
| 1. | பங்குபற்றிய பிரதிநிதிகள் | 97 . 72 % |
| | ஆண்கள் - | 02 . 27 % |
| | பெண்கள் - | |
| 2. | வயதின் அடிப்படையில் | 1 . 13 % |
| | குறைந்தபட்ச வயது - 20 | 9 . 09 % |
| | 20 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் - | 38 . 6 % |
| | 25 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் - | 47 . 2 % |
| | 31 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் - | 6 . 8 % |
| | 41 வயதிற்கு மேலுள்ளவர்கள் - | 1 . 13 % |
| | கூடியபட்ச வயது 50 - | 31 . 6 |
| | கலந்து கொண்டவர்களின் சராசரி வயது - | |
| | | 51 . 1 % |
| 3. | திருமணமானவர்கள் - | 48 . 9 % |
| | தனியானவர்கள் - | |
| 4. | பிராந்திய அடிப்படையில் பங்குபற்றியவர்கள் | 38 . 4 % |
| | யாழ்ப்பாணம் - | 38 . 4 % |
| | மட்டக்களப்பு - | 14 . 7 % |
| | வன்னி - | 13 . 6 % |
| | திருமலை - | 6 . 8 % |
| | மலையகம் - | 4 . 5 % |
| | வெளிநாடுகள் - | 3 . 6 % |
| | கொழும்பு - | |
| 5. | கல்வித் தகைமைகள் | 18 . 18 % |
| | 5 ம் வகுப்பு படித்தவர்கள் - | 13 . 64 % |
| | 8 ம் வகுப்பு படித்தவர்கள் - | 34 . 00 % |
| | க.பொ.த (சாதாரணம்) படித்தவர்கள் - | 23 . 86 % |
| | க.பொ.த. (உயர்தரம்) படித்தவர்கள் - | 10 . 22 % |
| | பட்ட மேற்படிப்பு படித்தவர்கள் - | |
| 6. | பேசத் தெரிந்த மொழிகள் | 100 . 0 % |
| | தமிழ்மொழி பேசத் தெரிந்தவர்கள் - | 17 . 05 % |
| | தமிழ் சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் - | 12 . 5 % |
| | தமிழ் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் - | 6 . 8 % |
| | தமிழ் ஆங்கிலம் சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் - | 1 . 13 % |
| | தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஜெர்மன் பல்கேரி ருஸ்யா - | 1 . 13 % |
| | தமிழ் ஆங்கிலம் உறிந்தி மலையாளம் அரபி - | 61 . 36 % |
| | தமிழ் மட்டும் பேசத் தெரிந்தவர்கள் - | |
| 7. | பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கம் | 25 . 0 % |
| | கூலித் தொழிலாளி வர்க்கம் - | 36 . 4 % |
| | விவசாய தொழிலாளி வர்க்கம் - | 9 . 1 % |
| | கடற் தொழிலாளி வர்க்கம் - | 29 . 54 % |
| | நடுத்தர வர்க்கம் - | |
| 8. | ஸ்தாபனத்தில் பணியாற்றிய காலம் | 1 . 13 % |
| | 5 வருடமாக பணியாற்றுபவர்கள் - | 42 . 05 % |
| | 5 தொடக்கம் 9 வருடங்களாக பணியாற்றுபவர்கள் - | 56 . 81 % |
| | 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றுபவர்கள் - | |
| 9. | சிறையில் இருந்தமையின் அடிப்படையில் | 71 . 6 % |
| | சிறையில் இருந்தவர்கள் - | 26 . 13 % |
| | புலிகளின் சிறையில் இருந்தவர்கள் - | 26 . 13 % |
| | சிறிலங்கா அரசுச்சிறையில் இருந்தவர்கள் - | 14 . 77 % |
| | இந்தியச் சிறையில் இருந்தவர்கள் - | 28 . 4 % |
| | சிறையில் இருக்காதவர்கள் - | 8 . 1 % |
| | மேற்கூறிய மூன்று சிறைகளிலும் இருந்தவர்கள் - | |
| 10. | அரச சபைகளை பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள் | 25 . 0 % |
| | மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தவர்கள் - | 3 . 41 % |
| | பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் - | |
| 11. | ஸ்தாபனப் பிரிவின் வேலை அடிப்படையில் | 67 . 1 % |
| | அரசியல் பிரிவில் வேலை செய்தவர்கள் - | 28 . 41 % |
| | இராணுவப் பிரிவில் வேலை செய்தவர்கள் - | 4 . 5 % |
| | வெளிநாட்டுக் கிளைகளில் வேலை செய்தவர்கள் - | |
| | | 19 . 31 % |
| 12. | கலைஞர்கள் | 12 . 5 % |
| | இலக்கியம் பேச்சு எழுத்தாளர்கள் - | 3 . 4 % |
| | இசைத்துறை - | 3 . 4 |
| | புகைப்படத்துறை - | |

படிப்பகம்

www.padippakam.com



# குடியேற்றங்களை அம்பலப்படுத்துங்கள்

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.செயலாளர்நாயகத்துக்கு

## திருமலைபிரஜை அவசரக் கடிதம்

திருகோணமலை
12 / 01 / 1993.

தோழர். சுரேஷ் பிரேமச்சந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர் யாழ்மாவட்டம்

அன்புள்ள தோழர் அறிவது,

<u>திருகோணமலையில் தீவிர சிங்களக் குடியேற்றங்கள்.</u>

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான திருகோணமலையில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. பின்வரும் இடங்கள் ஏற்கனவே தமிழ்மக்கள் இருந்து 1990ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து அரச கூலிப்படையினரால் அகதிகளாக்கப்பட்டும் இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் காணிகளாகும். நகரில் மடத்தடிச் சந்தியில் உள்ள வீரகத்திப்பிள்ளையார் கோயில் காணிகள், கிருஷ்ணன் கோயில் காணிகள், கொத்தி ஒழுங்கையில் தனிப்பட்ட தமிழர்களுக்குரிய உறுதிக்காணிகள், பெரியகடை கடற்படைத் தளத்திற்கு அண்மையிலுள்ள கொய்யாத் தோட்டம் என்றகாணி. இதில் 1990ம் ஆண்டுக்கு முன்னர் தமிழர்களே இருந்து வந்துள்ளனர்.

இக்காணிகளில் இருந்த தமிழ் மக்களுக்கு மறைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் அமரர் ஜோர்ஜ் தம்பிராஜா அனுமதிப்பத்திரம் கொடுத்துக்கூடஉள்ளார். ஆனால் 1990ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினால் கடற்படையினர் இங்கிருந்த தமிழர்களின் வீடுகளைக் கொழுத்தி அழித்துக் கலைத்த பிற்பாடு தற்போது அவ்விடத்தில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

தென்னிலங்கை கந்தற, மாத்தற மீன்பிடிச் சிங்களவர்களைக் கொண்டுவந்திங்கு குடியேற்றுவதற்காகத்தான் மீன்பிடி அமைச்சு திருகோணமலையில் நிறுவப்பட்டது. இவை தவிர ஒரு குழு சிங்களவர்களை குடியேற்ற செயல்பட்டு வருகிறது. இதற்கு அரசாங்க அதிபரும் உயர் கூலிப்படை அதிகாரிகளும் முழு ஆதரவும் வழங்கி வருகின்றார்கள் சிங்களவர்களுக்கு வேலை செய்பவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதினால் இப்படியான வேலைகளைச் செய்கின்றார்கள்.

மற்றும் நகரிலுள்ள உள்துறைமுக வீதியில் உள்ள தில்லை நயினார் தோட்டம், கோணேசர் வீதியில் பத்திரகாளி தீர்த்தம், ஆடும்பகுதி, கோணேசர்பெருமான் தெற்பம் ஏறும்பகுதியாகிய கடற்கரைப் பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இவர்கள் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் கூட பாவிக்கின்றார்கள். இதற்கு அரசாங்க அதிபரின் உதவியும் கிடைத்துள்ளது. அதேவேளை சொந்தக் காணிகளில் தமிழர் வாழமுடியாதபடிக்கு அரச கூலிப்படைகளின் முகாம்கள் பலாத்காரமாக நிறுவியுள்ளார்கள்.

தமிழ்மக்களின் வீடுகள், கடைகள், ஏன் உயிர்கள் கூட அரச கூலிப்படைகளே அழித்து வந்தன, வருகின்றன. இத்தனைக்கும் உண்மையான பயங்கரவாதிகளை இவர்கள் அழிக்கவில்லை. தென்னிலங்கை சிங்கள மக்களைக்கொண்டுவந்து குடியேற்றுவதில் உள்ள அக்கறை கூலிப்படைகளினால் அகதிகளாக்கப்பட்ட தமிழ்மக்களைக் குடியேற்றுவதிலோ அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதிலோ அரசோ;படைகளோ பாராமுகமாக செயற்படுகின்றன.

இன்று தமிழ்மக்கள் துப்பாக்கிமுனையில் அடக்கப்பட்டு வருகின்றார்கள். ஒரே தேடுதல், சுற்றிவளைப்புக்கள், கைது, சிறை, கடத்தல் ஆகியவைதான் நடக்கின்றன. திருகோணமலைக்கு ஓர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாதது, தட்டிக் கேட்க ஆள் இல்லாததினால் தங்கள்இஷ்டத்திற்கு உப்புவெளி விகாரை புத்தபிக்குவின் ஆட்டத்திற்கு அரசாங்க அதிபர் ஆடுகின்றார். திருகோணமலைக்கு வந்து பார்த்தால் உண்மை தெரியும். வெசாக் பண்டிகை கொண்டாட தமிழ்மக்களிடம் கப்பம் கேட்கின்றார்கள் கூலிப்படையினர்கள். தமிழ்மக்களின் கனகாமில் சந்தையை உடைத்து அந்த கற்களைக்கொண்டு உப்புவெளி புத்தவிகாரை, கோட்டையில் உள்ள விகாரை என்பன கட்ட கற்களை பறித்துள்ளார்கள் கூலிப்படையினர். அநியாயத்தைத் தட்டிக்கேட்டால் அவர்களின் சரித்திரம் முடிந்துவிடும். வாயால் சொல்லமுடியாத அநியாயம் திருகோணமலையில் தமிழ்மக்களுக்கு நடக்கின்றது. காரணம் எம் இனத்தில் ஒற்றுமை இல்லை. ஆளுக்கொரு இயக்கம் எல்லாம் பெரிசுக்கு வெளிக்கிட்டுத்தான் இந்த அவலநிலை.

உப்புவெளியில் சம்பந்தன்புரம், லவ்லேன், லிங்கநகர், பாலையூற்று, மட்கோ, போன்றபகுதிகளில் சிங்களக்குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மூன்றுமைல் சுற்றளவுள்ள நகரில் மூன்றுஇராணுவமுகாம்களும் ஒரு கடற்படைத்தளமும் ஏழு பொலிஸ் நிலையங்களும் போதாதென்று லிங்க நகரிலுள்ள தமிழ்மக்களை வெளியேற்றுவதற்காக அவ்விடத்தில் கூட ஒரு இராணுவமுகாம் அமைப்பதற்கு அங்குள்ள தமிழ் மக்களை அப்புறப்படுத்தியுள்ளார்கள். இவை என்னத்தைக் காட்டுகின்றது. தமிழினத்தையே வேரோடு அழிப்பதே ஸ்ரீ லங்கா அரசின் திட்டம்.

அரசாங்க அதிபர் சிங்களவன்.
கூட்டுப்படைத் தளபதி சிங்களவன்.
பொலிஸ் அத்தியட்சகர் சிங்களவன்.
அத்துடன் திருகோணமலையில் வாழும் தமிழ்மக்களுக்கு ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் கூட இல்லை.

ஜனாதிபதி நடமாடும் சேவை திருகோணமலையில் வைக்கக் காரணம் இங்கு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு நிரந்தரமாக அனுமதிபத்திரம் வழங்குவதற்கும் கவர்னரின் நிலையை ஸ்திரப்படுத்துவதற்குமேயாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் வெளிநாட்டுக் கடன்கள் பெற்று சிங்கள குடியேற்றங்களுக்கும், தமிழர்களைக் கொல்வதற்கு ஆயுதங்கள் வாங்கவுமே பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் தமிழ்மக்களுக்கு நடக்கும் அநியாயத்தை எந்த நாடுகள் இதுவரை தட்டிக் கேட்டன? ஐக்கியநாடுகள் சபை என்ன செய்கின்றது. காமன்வெல்த் என்னசெய்தது? அணிசேரா இயக்கத்தின் நோக்கம் என்ன? இவர்களுக்கு ஈழத் தமிழர் படும் துயரம் தெரியாதா? திருகோணமலை நகரில் பன்னிரெண்டு கூலிப்படை முகாம்கள் இருந்தும் ஒவ்வொருநாளும் தமிழ்மக்களின் வீடுகள் சோதனை இடப்படுவது நின்றபாடில்லை. இத்தனைக்கும் 14 தடைமுகாம்கள் நகரில் மட்டும் உள்ளன. திருகோணமலையில் தமிழ்மக்களுக்கு நடக்கும் அநியாயங்கள் வெளிஉலகத்திற்கு தெரியாது தமிழர்களின் காணிகளில் தான் அபிவிருத்தி திட்டம். அதேவேளை சிங்களவர்கள் குடியிருக்கும் காணிகளில் இல்லை. இது தமிழர்களை வெளியேற்ற அரசு எடுக்கும் அநியாயம். யு.என்.எச்.சி.ஆர் தமிழ் மக்களுக்கு கட்டிக்கொடுத்த வீடுகள் கூட கூலிப்படைகள் குச்சவெளியில் உடைத்துள்ளார்கள். இதை யு.என். டி. பி. இலங்கை பிரதிநிதி றொபர்ட் இங்கிலேண்டுக்கு அறிவியுங்கள். திருகோணமலை தமிழ் மக்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லை. இலங்கை அரசு தன் இஷ்டத்திற்கு செய்கிறது.

இனப்பிரச்சனையை தீர்க்கும் நோக்கம் அரசுக்கு அறவேயில்லை. எப்படியாவது இராணுவத் தீர்வையே எதிர்பார்க்கிறது. யாழ்ப்பாண தமிழர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை. முன்னர் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் என்றபோட்டி இன்று ஆறு இயக்கங்களுக்குள் போட்டி. ஆனால் இயக்கத்தலைவர்கள் அத்தனைபேரும் ஒரே ஊர் ஆட்கள். இப்படியானால் எப்படி எமது இனம் விடுதலை அடைவது. தமிழினம் இன்றுபடும் அவலநிலையை போக்க வழியில்லாத இயக்கங்கள் இருந்துதான் என்ன பலன். தமிழனைத் தமிழன் அழித்ததுதான் இயக்கங்கள் தமிழ் மக்களுக்கு செய்த நன்மை மட்டுமல்லாது இருந்த இடங்களையும் சிங்களவர்களுக்கு பறிகொடுத்தது தான் கண்ட பலன். இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் எந்த உறுப்பினரும் முன்னவர்கள் போல இல்லை. ஆயுதத்தை தூக்கி தமிழினத்தை அழித்ததுதான் கண்ட பலன். ஆயுதத்தை யாருக்கு எதிராக பயன்படுத்த வேண்டும். எப்படி பயன் படுத்த வேண்டும்? என்பதை தெரியாதவர்கள் ஆயுதம் தூக்கினால் அழிவுதான் மிச்சம். பல ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாக இருக்க இடமின்றி அலைகிறார்கள். தங்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து திருகோணமலையில் நடக்கும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள். தமிழ் மக்களுக்கு நடக்கும் அநியாயங்களை வெளிநாட்டு தூதுவர்களுக்கும், வெளிநாட்டுத் தலைவர்களுக்கும், சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச மனிதஉரிமைகள் ஸ்தாபனம் போன்றவற்றிற்கும் அறிவியுங்கள். ஸ்ரீ லங்கா அரசு தமிழ் தலைவர்களை ஏமாற்றி, இந்திய அரசை ஏமாற்றி, தற்போதைய இளம் தலைமுறையினரையும் ஏமாற்றி உலக நாடுகளையும் ஏமாற்றி வருகின்றது. இனப்பிரச்சனையை மூடிமறைத்து பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைக் காட்டிவருகின்றது. திருமலையில் ஒரு தமிழன் நான்கு அடையாள அட்டைகளுடன் உலாவவேண்டும். ஒன்று தேசிய அடையாள அட்டை. இராணுவ அடையாள அட்டை. தொழில் அடையாள அட்டை. பொலிஸ் அடையாள அட்டை என்பனவாகும். என்ன செய்வது உடன் பதில்.

தோழமையுள்ள

திருகோணமலை மக்கள் சார்பாக.

**பாதுகாப்புக் காரணங்களால் பெயர் விபரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.**

## வடக்குக்கிழக்கு இணைப்பில் அரசு அசட்டை

பெர்ணாட் சொய்சா

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை அசட்டை செய்துவரும் இலங்கை அரசு அதற்கான ஒரு மாற்றுத்தீர்வையும் வைக்க தவறிவிட்டது என பெர்ணாட் சொய்சா தெரிவித்துள்ளார்.

'தமது கட்சியின் பார்வையில் இனப்பிரச்சனை' என்ற தலைப்பில் பெர்ணாட் சொய்சா எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகியும் மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவில்லை. பத்து வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில் இரத்தக்களரி நீடித்துக்கொண்டு இருக்கின்றது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தைவிட்டு இனப்பிரச்சனைக்கு வேறுதீர்வு காணமுடியாது . வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை அரசு அசட்டைசெய்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் அதற்கான ஒரு மாற்றுத்தீர்வையும் இதுவரை அரசு முன்வைக்க தவறிவிட்டது. சர்வஜன வாக்கெடுப்பின்றி இரு மாகாணங்களும் இணைந்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



## உரிமைகளைப் பெறுவதற்கான உங்கள் பணிகள் போற்றத்தக்கனவாகும்.

### இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி வாழ்த்து.

எதிர்கால திட்டங்களை வரைந்து, ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளை வென்றிட, கூடியுள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், செயலாளர் நாயகம். தோழர் பிரேமச்சந்திரன் அவர்களுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக்குழுவின் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸுக்கு இந்திய கட்யுனிஸ்ட் கட்சி அனுப்பியுள்ள வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழ்மாநிலக்குழு செயலாளர் தோழர். ஆர். நல்லக்கண்ணு அனுப்பியுள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

இலங்கையில் தமிழ் சமுதாயத்தில் இன, மொழி, பொருளாதார, கலாச்சார, மாநில உரிமைகள், மனிதஉரிமைகள் பத்தாண்டுகளாக பறிக்கப்பட்டு, சொல்லெனாத் துயரத்திலும், பேரழிப்பிலும் ஆழ்ந்துள்ளது. இந்தநிலை மாறாதா என்ற ஏக்கமும், சூழ்ந்த வேதனையும் தமிழக மக்களிடம் குடிகொண்டுள்ளது.

ஈழத்தில் தமிழ்மக்களின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக, எண்ணற்ற தியாகங்களைச் செய்து, ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி ஆற்றிவரும் பணிகள் என்றென்றும் போற்றத் தக்கனவாகும்.

அமரர் பத்மநாபா அவர்கள் தலைமை, இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை அமுலாக்கிடவும், மாகாணசபையின்மூலம் தமிழர் உரிமைகளைக் காத்திடவும் ஆற்றிய பணிகள் இந்திய ஜனநாயக சக்திகளால் பெரிதும் பாராட்டப் பெற்றன.

இந்தியாவின் நெருங்கிய நட்புச் சக்தியாக, இலங்கையில் இடதுசாரி, ஜனநாயக சக்திகளை இணைக்கும் பாலமாக, தோழர். பிரேமச்சந்திரன் அவர் களின் தலைமையில், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆற்றிவரும் பணிகள் மனநிறைவளிப்பதாகும்.

தமிழர் கழகங்கள் ஒன்றுபடவும், ஏனைய ஜனநாயக சக்திகளையும் இணைத்து, தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றிடவும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கடுமையான சோதனைகளுக்கிடையே போராடிவருவது நம்பிக்கையளிப்பதாக அமைந்துள்ளது.

## வவனியா விவசாயக்கல்லூரி பட்டதாரிகள் கவலை

தமிழ்பேசும் மக்களின் வடக்கு கிழக்கு மாகாண அரசின் முதலமைச்சர் தோழர் வரதராஜப்பெருமாள் அவர்கள் 1989ம் ஆண்டு எடுத்த பெரும் முயற்சியினால், விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர், செயலாளர், மத்திய விவசாயத்துறை பணிப்பாளர் ஆகியோரின் கூட்டு சம்மதத்துடனும் அனுமதியுடனும் வவுனியாவில் விவசாயக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப் பட்டது.

இக் கல்லூரியில் பயின்ற பதினேழு மாணவர்கள் விவசாயக் கல்லூரியையும், பயிற்சியையும் பெற்று டிப்பிளோமா பட்டம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண விவசாய திணைக்களம் விவசாய போதனாசிரியர் நியமனங்களை தற்காலிகமாக வழங்கியிருந்தது.

இந்தத்துறையில் டிப்பிளோமாபெற்ற மாணவர்களுக்கு பல்வேறு அரசநியமனங்கள் வழங்குவதற்காக நடாத்தப்பட்ட நேர்முக மற்றும் இதர பரீட்சைகளில் தேர்ச்சியும் அடைந்துள்ளனர். இவர்களுக்கான நியமனங்கள் மத்திய விவசாயதுறையால் வழங்கப்படாதது குறித்து இம்மாணவர்கள் கவலைதெரிவித்துள்ளனர்

## தமிழ்மக்களின் நிலங்களில் இராணுவம் பயிர்செய்கை

பலாலி இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள வசாவிளான் பகுதிகளில் இராணுவத்தினர் விவசாயம் செய்துவருகின்றனர். இருபத்தைந்து இராணுவத்தினராலும் பதினைந்து முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினர்களாலும் இப்பிரதேசத்தில் மரக்கறி வகைகள் பயிரிடப் படுகின்றன. இப் பயிர்ச்செய்கையில் பெறப்படும் விளைபொருட்களில் சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான மரக்கறிகள் இராணுவத்தினரின் உணவு தேவைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விவசாய பூமி முன்னாள் தமிழர்களின் பயிர் செய்கை நிலமாக இருந்ததென்பது குறிப்பிடத் தக்கது.

## இனப்பிரச்சனைத் தீர்வில் இணைப்ப அவசியம்

### முன்னாள் இந்தியத்து துவர் ஜா

இனப்பிரச்சனைக்கான தீர்வில் இலங்கையானது இணைப்பு குறித்த தமிழின உணர்வை கருத்தில்கொள்ள வேண்டுமென ஓய்வுபெற்று சென்ற இலங்கைக்கான இந்திய தூதுவர் நாகேந்திர ஜா 'இந்து'ப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தாவது :-

இனப்பிரச்சனைக்கு இலங்கை தானாகவே தீர்வை காணவேண்டும். சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படவேண்டும். இதற்கான விவகாரங்களை கையாள இலங்கை அரசாங்கத்திற்கு உதவும் வகையிலான ராஜதந்திர பங்களிப்பை இந்தியா செய்துதவும்.
இது அவநம்பிக்கையும், சந்தேகமற்ற ஒரு நிலையிலும் தான் சாத்தியமாகும். இனப்பிரச்சனையால் தமிழ்நாட்டில் ஏற்படக் கூடிய விளைவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இந்தியாவின் எண்ணத்தை இலங்கை புரிந்துகொள்ளவேண்டும். இணைப்பு குறித்து தமிழின உணர்வைக் கருத்தில் கொண்டதாகவே இறுதியான இணக்கம் அமையவேண்டும் என கூறியுள்ளார்.

## தங்கள் நல்லெண்ண புரட்சிகர முயற்சிகளுக்கு துணை நிற்போம்

### இந்திய ஐக்கியபொதுவுடமைக்கட்சி வாழ்த்து.

ஈழமக்கள். புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் நடைபெறஇருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். தங்கள் அமைப்பு உருவான காலத்திலிருந்தே ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மாநிலம் கண்டு, தமிழ் மக்களுக்கு ஈழத்தில் அனைத்து உரிமைகளையும் பெற்றுத்தர தொடர்ந்து போராடி வருவதைக்கண்டு நாம் பெருமைப்படுகிறோம்.

என இந்திய ஐக்கிய பொதுவுடமைக்கட்சி அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

இந்திய ஐக்கிய பொதுவுடமைக்கட்சியின் சார்பில் தமிழ்மாநிலக் குழு செயலாளர் தோழர். மாணிக்கம் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்திய- இலங்கைக்குமிடையே நட்புப் பாலமாக இருந்த மறைந்த தலைவர் பத்மநாபா அவர்களின் தியாகம் நிறைந்த வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்ட பாங்கினை, இரு நாட்டிலும் உள்ள அமைதியை விரும்பும் சக்திகள் பாராட்டியே வந்தன

மனித இனம் அல்லல்படுவதை எதிர்த்து வரும் மகத்தான கட்சியின் வாரிசுகளாக கூடியிருக்கும் இரண்டாவது மாநாட்டு பிரதிநிதிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு பத்மநாபாவின் வழியில் மாநாடு வெற்றி பெற தக்க முடிவுகள் எடுத்து செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை, தலைவர். எம். கல்யாணசுந்தரம் அடியொற்றிவரும் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு தொடர்ந்து இருந்து வருகிறது.

தாங்கள் நடத்திவந்த கட்சிகளின் போராட்டங்களின் வரலாற்றில் சில இடையூறுகள், பின்னடைவுகள் ஏற்பட்டது என்பது உண்மையாயினும், பயங்கரவாதம் என்றைக்கும் வென்றதில்லை. சில சமயங்களில் பின்னடைவு அல்லது தேக்கம் என்ற கசப்பான படிப்பினைகள் கூட வருங்காலவெற்றிக்கு அவசியம் என்பதை மாமேதை கார்ல்மாக்ஸ் கூட அறிவுறுத்தியுள்ளார்.

கடந்து வந்த பாதையில் கிடைத்த படிப்பினைகளிலிருந்து முன்னேற வேண்டிய பாதைக்கு செல்ல திட்டமிட்டு செயல்பட முடிவெடுப்பீர்கள் என ஆழமாகக் கருதுகிறோம். தங்களின் நல்லெண்ண புரட்சிகர முயற்சிக்கு ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி என்றும்போல் துணைநிற்கும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - நீடுழி வாழ்க.
ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி - நீடுழி வாழ்க.
உலகப் பாட்டாளி வர்க்க ஒற்றுமை - ஓங்குக.
தங்களின் மாநாடு வெற்றி பெறட்டும் !

## இழப்புகள் என்றும் மறப்பதற்கில்லை.



நாம் உங்களுக்கு கூறுவது பன்னவெளியில் நமது சுதந்திரத்தை நாம் அடையும் வரை சமாதானமாக வாழ்கின்ற நிலையை நாம் எட்டும்வரை, எமது ஜனநாயக உரிமைகளையும், கௌரவத்தையும் நாம் நிலைநாட்டும் வரை நமது போராட்டம் முடியப் போவது இல்லை.

தோழர் க.பத்மநாபா.

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பங்குனி 30 என்பது மறக்கபட முடியாத ஒரு இருண்ட நாளாகி விட்டதை ஈழதேசத்து மக்கள் மறக்க மாட்டார்கள். ஆம், விடுதலைப் போராளிகள் என்று வேடமிட்டுக் கொண்டு ஈழ தேசத்தின் தெருக்களில் பிணந்திண்ணிப் பேய்களாக மக்களின் அழிவிலே ஆனந்தம்கொள்ளும் சாத்தான்களாக, சர்வதேச நாசகார கும்பல் என இன்று புகழ் பெற்ற புலிகள் இயக்கத்தினரால்நடத்தி முடிக்கபட்ட இன்னொரு வெலிக்கடை படுகொலை தான் பங்குனி 30ல் எமது தேசத்தில் நடந்த நல்லூர் படுகொலை!

ஜனநாயகத்திற்காக போராடிய 57 தோழர்கள் ஒரே இரவில் புலிகள் இயக்கத்தை சேர்ந்த துரோகி அருணாவால் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்ட அந்த நாளை எப்படி மறக்க முடியும்? அந்த இனிய தோழர்கள் கொண்டிருந்த இலட்சியங்களை தாங்கி முன்னேறி செல்ல இன்னொரு சந்ததி இருந்ததை அந்த மூடர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஸ்ரீலங்கா இனவெறி அரசபடைகளுடனும் பாசிசபுலிகளுடனும் போராடி வீரமரணத்தை தழுவிய தோழர்கள் சிலரின் விபரங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. தோழர் யாழினி | புதுக்குடியிருப்பு | S.L.A | -1984. |
| 2. " செல்வம் | சிலாவத்தை | " | -1985 |
| 3. " சுபாஸ் | முல்லைத்தீவு | " | - " |
| 4. தளபதி ஜெஸ்லி | மாமுனை | " | -1986 |
| 5. தோழர் சசி | கள்ளப்பாடு | L.T.T.E | - " |
| 6. " ரோகன் | " | " | " |
| 7. " முகுந்தன் | முள்ளியவளை | S.L.A | " |
| 8. கப்டன் விக்கி | உடையார்கட்டு | L.T.T.E | " |
| 9. தோழர் யூட் | சிலாவத்தை | S.L.A | " |
| 10. " குமார் | தண்ணிஊற்று | " | " |
| 11. " கங்கா | கருநாட்டுக்கேணி | " | " |
| 12. " அன்பு | கள்ளப்பாடு | " | " |
| 13. " அஜித் | சுதந்திரபுரம் | LT.T.E | " |
| 14 " மோகன் | கருநாட்டுக்கேணி | " | " |
| 15. " சுமித்திரா | முள்ளியவளை | S.L.A | " |
| 16 தளபதி கதிர் | பூனகரி | L.T.T.E | 1987 |
| 17. தோழர் ராஜி | உடையார்கட்டு | " | " |
| 18. " சுகந்தன் | புதுக்குடியிருப்பு | " | " |
| 19. " ஜேம்ஸ் | கள்ளப்பாடு | " | " |
| 20 " தேசன் | புதுக்குடியிருப்பு | " | " |
| 21. " சிவம் | சிலாவத்தை | " | " |
| 22. " ஜீரோப்பியன் | அளம்பில் | " | 1988 |
| 23. தளபதி கொட்லின் | சிலாவத்தை | " | " |
| 24. " சுந்தர் | புதுக்குடியிருப்பு | " | " |
| 25. தோழர் சங்கர் | சுதந்திரபுரம் | " | " |
| 26. தோழர் ரவி | கள்ளப்பாடு | L.T.T.E | 1988 |
| 27. " நகுலன் | தண்ணிஊற்று | " | " |
| 28. " பாசன் | சுதந்திரபுரம் | " | " |
| 29. " அன்பு | புதுக்குடியிருப்பு | " | " |
| 30. " சுரன் | தண்ணிஊற்று | " | 1989 |
| 31. " ஜாபன் | புதுக்குடியிருப்பு | " | " |
| 32. " சுந்தர் | " | " | " |
| 33. " ஜெஜி | " | " | " |
| 34. " ரொபேட் | சுதந்திரபுரம் | " | " |
| 35. " முகுந்தன் | முள்ளியவளை | " | " |
| 36. " பிரேம் | " | " | " |
| 37. " கமல் | மாமுனை | " | " |
| 38. " பிரபு | வல்வெட்டித்துறை (கம்பர்மலை) | " | " |
| 39. " மதன் | முள்ளியவளை | " | 1990 |
| 40. " சுடாபி | அளம்பில் | " | " |
| 41. " சின்னவன் | மாமுனை | " | " |
| 42 " சுரேஸ் | கள்ளப்பாடு | " | " |
| 43. " செல்வம் | புதுக்குடியிருப்பு | " | " |
| 44. " ஜோர்ஜ் | திருகோணமலை | L.T.T.E&S.L.A | " |
| 45. தளபதி குமார் | மட்டக்களப்பு | S.L.A | 1987. |

வீரமரணத்தை தழுவிய இந்த தோழர்களுக்கு வீரவணக்கம் செய்யும் இதே நாளில் எமது வடகிழக்கு பிராந்தியத்தில் விடுதலைப் பணியில் ஈடுபட்டிருந்த போது ஸ்ரீலங்கா அரச படைகளாலும், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின்னால் புலிகளின் அராஜகத்தையும் ஸ்ரீலங்காஅரச படைகளையும் எதிர்த்துப் போராடி வீரமரணமடைந்த எமது தோழர்களுக்கு.
எமது புரட்சிகர அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

தோழர்களே!

எமது தோழர்கள் எந்த இலட்சியங்களுக்காக போராடினார்களோ அந்த இலட்சியங்களுக்காக தொடர்ந்து போராடுவோம். இலட்சியங்களைவென்றெடுப்பதற்கான புரட்சிகரப் பாதையில் உறுதியுடன் செல்வோம்.

நன்றி

E.P.R.L.F நண்பர்கள், தோழர்கள் சுவிஸ்.

படிப்பகம்

www.padippakam.com



# காங்கிரஸ் தீர்மானங்கள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் இருபத்திமுன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தமிழ் அரசியல்கட்சிகளுக்கு அறைகூவல்

தமிழ்பேசும் மக்களின் தேசியஇனப்பிரச்சனை தீர்க்கப்படாமல் அவர்களை முற்று முழுதாக அழித்தொழிப்பதற்கான ஓர் யுத்தத்தையே சிறிலங்கா அரசு நடாத்தி வருகின்றது. தமிழ் இயக்கங்கள், கட்சிகள் வைத்த நாலு அம்சக் கோரிக்கையை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ளாமல் தானும் ஓர் நியாயமான தீர்வை முன்வைக்காமல் தமிழ்மக்கள் மீதான இராணுவநடவடிக்கைகளையே அதிகரித்துவருகின்றது இந்நிலையில் தமிழ் அரசியற் கட்சிகள் தனித்தனியான தீர்வுகளை முன்வைப்பதும் பிரச்சனைகளின் முழு வடிவத்தையும் உணர்ந்து கொள்ளாமல் செயற்படுவதும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை பலவீனப்படுத்தும் ஓர் முயற்சியாகவே இருக்கும். எனவே தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதென்ற ஒரு விடயத்திலாவது தமிழ்கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரே குரலில் இயங்கவேண்டுமென, அனைத்து தமிழ் அரசியற்கட்சிகளுக்கும் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

## சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கான அறைகூவல்

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கை மக்களை மிகவும் மோசமாக வாட்டுகின்ற, தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்கும், தென்னிலங்கையில் நிலவிவரும் ஜனநாயகமற்ற சூழ்நிலையும், மனித உரிமைகள் மதிக்கப்படாத தன்மையும் முக்கிய காரணங்களாகும். தென்னிலங்கையில் ஓர் ஜனநாயகச் சூழ்நிலையை மீண்டும் நிலைநாட்டுவதற்கு சிங்கள முற்போக்கு ஜனநாயகச் சக்திகளுக்கு மிகவும் முக்கிய பங்குண்டு. அத்தகைய ஒரு போராட்டத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது முழுமையான ஆதரவை நல்குமென உறுதியளிக்கின்ற அதேவேளை, ஜனநாயகத்தை மீட்பதற்கும், தமிழ்மக்களின் நியாயமான அபிலாசைகளை திருப்திப்படுத்தும் ஓர் அரசியற்தீர்வைக் காண்பதற்கும் தமது காத்திரமான பங்களிப்பை நல்கவேண்டுமென அனைத்து முற்போக்கு ஜனநாயக கட்சிகளுக்கும் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

## யு. என். பி. அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள்

1988 –1989 காலப்பகுதியில் தென்னிலங்கை மத்திய மலையகப்பகுதிகளிலும் ஜனதா விமுத்தி பெரமுன என்ற தீவிரவாத இயக்கத்தை ஒழித்துக்கட்டுதல் என்ற போர்வையில் யு.என்.பி. அரசு அப்பாவி சிங்களமக்கள் மீது மேற் கொண்ட ம னித உரிமை மீறல்கள், மற்றும் படுகொலை நடவடிக்கைகளை காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கின்றது.

## சிறிலங்கா சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை உடன்விடுதலை செய்ய வேண்டும்

புலிகளுடனான மோதல் ஆரம்பித்த 1990ம் ஆண்டின் யூன்மாதத்தின் பின்னர் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளிலும், இராணுவமுகாம்களிலும் வருடக்கணக்காக எந்தவிதவிசாரணையுமின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதில் பலபேர் எங்கிருக்கிறார்கள் என்றே அவர்களது பெற்றோர்களுக்குத் தெரியாது. எனவே கைது செய்யப்பட்டு பல்வேறுபட்ட இடங்களிலும் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாக அவர்களது பெற்றோர்களுக்கு உடன் அறிவிப்பதுடன், அப்பாவிகள் அனைவரையும் விசாரிக்கப்பட்டு உடன் விடுவிக்கப்படவேண்டுமென இலங்கையரசை காங்கிரஸ் கோருகின்றது.

## இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் இந்தியாவின் பங்களிப்பு

இலங்கை தமிழ்மக்கள் அனைவருமே புலிகள் அல்ல. புலிகளின் பாசிசத்தை அடக்க வேண்டும் என்பதில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கோ ஏனைய இலங்கைத் தமிழ்க் கட்சிகளுக்கோ எந்தவித கருத்து வேறுபாடுமில்லை. ஆனால், புலிகளை இனங்கண்டு அவர்களை அழிப்பதற்குப் பதிலாக, ஒட்டுமொத்தமாக இலங்கைத் தமிழ்மக்களையும் குற்றவாளிகள் என்றகண்ணோட்டத்தில், இந்திய மத்திய அரசும் சரி, தமிழக மாநில அரசும் சரி, இந்திய மக்களும் சரி பார்ப்பது தவறானது ஆகும். தமிழ் அகதிகளைப் பயன்படுத்திக் கொண்டு புலிகள் செயற்படுவதாக இந்தியா தொடர்ந்து கருதுமாயின் அதற்குரிய மாற்றுவழிகளை இந்தியா சரியான முறையில் கையாளவேண்டும்.

அதற்குப் பதிலாக தமிழ் அகதிகளை நிர்ப்பந்தப்படுத்தி திருப்பி அனுப்புவது எதிர்விளைவுகளையே உருவாக்கும். அது மாத்திரமல்லாமல் புலிகள் இந்திய அரசுக்கு விரோதமாக நடக்கிறார்கள் என்பதற்காக, இந்திய அரசு சிறிலங்கா அரசாங்கத்தின் இன விரோத நடவடிக்கைகள் தொடர இடமளிப்பதும்,தமிழ் மக்களின் அழிவை கண்டும் காணாமல் இருப்பதும் வருந்தத்தக்க செயலாகும். இலங்கையின் இனப்பிரச்சனை ஓர் தீர்வுக்கு வராமல் நீண்டுகொண்டுபோக இடமளிப்பதானது இன்றையிலும்விட பாரிய விளைவுகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும். இவ்விளைவுகள் இந்தியாவை மாத்திரமல்லாமல் இப் பிராந்தியத்தையே பாதிக்கும் நிலை உருவாகும். எனவே மேற்கண்ட விடயங்களை கவனத்தில் கொண்டு இந்திய அரசும், தமிழக அரசும் இலங்கை இனப்பிரச்சனை தீர ஆக்கபூர்வமான பங்களிப்பை செலுத்த வேண்டுமென காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.

## வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு முக்கியமான காரணிகளில் ஒன்று இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமாகும். இலங்கை அரசின் திட்டமிட்ட இச் சிங்களக் குடியேற்றத்தால் பாரம்பரியமாகவே தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவந்த தமிழ் பிரதேசங்களில் அவர்கள் இன்று சிறுபான்மையினராக்கப்பட்டு வருகின்றனர். அது மாத்திரமல்லாமல் அவர்களது தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதை நோக்கமாகக் கொண்டும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே இப்படியான சிங்களக் குடியேற்றங்கள் யாவும் நிறுத்தப்படுவதுடன் வடக்கு கிழக்கைப் பிரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் உடன் அகற்றப்படவும் வேண்டுமென காங்கிரஸ் இலங்கையரசை வலியுறுத்துகின்றது அத்துடன் யுத்தத்தில் தமிழ்மக்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கும் சமயத்தில் அவர்களது வீடுகளில் சிங்களமக்கள் அத்துமீறி குடியேறுவதும், கோயில் காணிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதும் உடன் நிறுத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்துகின்றது.

## இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு

பல்வேறு நாடுகளில் நிலவிவருகின்ற இனப் பிரச்சனைகள், இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இன்றைய காலகட்டத்தில் சர்வதேசரீதியாகவுள்ள பல்வேறுபட்ட நாடுகளின் கூட்டமைப்புகளின் விவாதத்துக்குரிய விடயங்களாக கொண்டுவரப்படுவதோடு, இவை தொடர்பான தீர்வுகளில் சர்வதேசநாடுகளுக்கு அக்கறையும் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் இந்திய அரசானது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அரசு என்றவகையிலும், இலங்கையின் இனப்பிரச்சனையை இதுவரைகாலமும் தானே தீர்த்துக்கொள்வதாக ஏற்றுக்கொண்ட அடிப்படையிலும் இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்சனைகளையும், அவை தொடர்பான அரசியல் தீர்வு விவகாரங்களையும் ஐக்கியநாடுகள் சபை உட்பட சகல சர்வதேச அரங்குகளுக்கும் எடுத்துச்செல்லவேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உண்டென காங்கிரஸ் கருதுவதோடு இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென இந்திய அரசை காங்கிரஸ் வலியுறுத்துகின்றது.

## இடம் பெயர்ந்த முஸ்லீம் மக்களின் குடியேற்றம்

1991ம் ஆண்டு வடக்கு மாகாண முஸ்லீம் மக்கள் உடுத்த உடையுடன் தமது சொந்தப் பிரதேசங்களைவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப் பட்டனர். இன்று அவர்கள் இருக்க இடமின்றி எந்தவித வேலையுமற்று, தமது உணவுக்கே கஷ்டப்படும் நிலையில் இலங்கையின் தென்பகுதிகளில் இருக்கும் பல அகதி முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியேற்றவும், தமது தொழில்களை மீண்டும் ஆரம்பித்து ஓர் நிம்மதியான வாழ்வை நடாத்தவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது சகல ஒத்துழைப்பையும் வழங்குமென காங்கிரஸ் தீர்மானிக்கின்றது.

## புலிகளின் தமிழினத் துரோகச்செயல்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளான:–

1. ஏனைய விடுதலை இயக்கங்களையும், அதிலிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான போராளிகளையும், அதன் தலைவர்களையும் அழித்தமை.
2. முஸ்லீம் மக்களை வடமாகாணத்திலிருந்து விரட்டியமையும், கிழக்கு மாகாணத்தில் படுகொலை செய்து வருகின்றமையும்
3. இந்தியத்தலைவர் திரு.ராஜீவ்காந்தி அவர்களை படுகொலை செய்தமையும்.
4. இந்திய இலங்கை உடன்பாட்டை நிறைவேற்றும் பொருட்டு நண்பனாக வந்த இந்திய அமைதிப்படை மீது அநாவசிய யுத்தம் ஒன்றை ஏற்படுத்தியதன்மூலம் தமிழ்மக்களுக்கு கிடைக்கவேண்டிய அதிகாரப்பரவலாக்கலை தடுத்தமையும்
5. பொது எதிரியாகிய சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்து வடக்கு கிழக்கு மாகாண அரசை கலைத்தமையும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தை நாசமாக்கியதுடன் தமிழ்மக்களின் உரிமைகளுக்கும், அபிலாசைகளுக்கும் விரோதமானவை என காங்கிரஸ் பிரகடனப் படுத்துகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



## மறைந்த இலங்கைத் தமிழ் இடதுசாரித் தலைவர்களுக்கு இரங்கல்

பிரபல இடதுசாரித் தலைவரும், தொழிற் சங்கவாதியும், மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணைந்து ஈழத் தொழிற் சங்க சம்மேளனத்தின் ஊடாக பெரும் பங்காற்றியவரும், எமது இரண்டாவது காங்கிரஸ் நடைபெறுவதற்கான தயாரிப்பு வேலைகளில் முக்கியபங்கு வகித்தவருமான தோழர். வீ.ஏ.கந்தசாமி அவர்களின் மறைவுக்கு காங்கிரஸ் தனதுஅஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றது

இடதுசாரித் தொழிற்சங்கவாதிகளான தோழர்.விஜயானந்தன், தோழர். அண்ணாமலை ஆகியோர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டமையை காங்கிரஸ் கண்டிப்பதுடன் அவர்களின் மறைவால் துயறும் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## இலங்கைத் தமிழ்அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை இந்திய அரசு நிறுத்த வேண்டும்

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து யுத்தம் நடந்துகொண்டிருப்பதாலும்,இதில் தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கானமக்கள் படுகொலை செய்யப்பட்டுக்கொண்டிருப்பதனாலும், வடக்கு கிழக்கு மாகாணத்திலேயே தொடர்ச்சியாக இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகிக்கொண்டிருப்பதனாலும், யுத்த சூழ்நிலை காரணமாக மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் போன்ற தொழில்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதனாலும், இந்தியாவிலிருந்து செல்லும் அகதிகள் தமது சொந்த இருப்பிடங்களுக்குப் போகமுடியாமல் அங்குள்ள அகதிமுகாம்களிலேயே தஞ்சமடையும் நிலை உள்ளது. அதே சமயம் இந்திய அகதி முகாம்களில் அதிகாரிகளின் நிர்ப்பந்தங்களுக்கு அகதிகள் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அகதிகள் முகாம்களில் மருத்துவ வசதியோ, சிறுவர்களுக்கான கல்விவசதியோ முற்றுமுழுதாக மறுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளும் மிகவும் சொற்பமாக உள்ளது.இந்திய அரசு அதிகாரிகளின் இப்படியான நிர்ப்பந்தங்களும், நடவடிக்கைகளும் இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு திரும்பிச்செல்ல நிர்ப்பந்தப்படுத்துகின்றனவே தவிர எமது சொந்த விருப்பத்தின்பேரில் அவர்கள் இலங்கை திரும்பவில்லை.

மேற்கண்ட கருத்துக்களை கவனத்திலெடுத்து இலங்கையில் அரசியல் தீரவொன்று ஏற்பட்டு, அகதிகள் கௌரவமாக திரும்பிச் செல்லக்கூடிய சுமுகமான சூழ்நிலை தோன்றும்வரை தமிழகஅரசும், மத்தியமாநிலஅரசும் அகதிகளை அனுப்புவதை உடன் இடைநிறுத்த வேண்டுமென இக்காங்கிரஸ் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதுடன் அகதிகளுக்கான மருத்துவம், கல்வி போன்றவற்றிற்கு ஏற்றவசதிகளை இவ்வரசுகள் உடன் செய்துகொடுக்க வேண்டுமெனவும் இக் காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.முன்னாள் பிரதமர்கள் இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரும், முன்னாள் தமிழக முதல்வர். எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களும் ஈழத்தமிழ் அகதிகள் தொடர்பாகவும், இலங்கைப் பிரச்சனையில் தமிழ்மக்களுக்கு ஆதரவாக நடந்துகொண்டதை நாம் நன்றியுடன் நினைவுகூருவதுடன், மத்திய மத்திய மாநில அரசுகள், அவ்வழிமுறையை முன்மாதிரியாகக்கொண்டு செயற்படும்படியும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது.

## இலங்கையில் யுத்த நிறுத்தமும் அரசியல் பேச்சும்

இன்று புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்துகொண்டிருக்கும் யுத்தம் அத்தமற்றதுடன், இவ் யுத்தமானது இலங்கைத் தமிழ் இனப் பிரச்சனைக்கு எந்த விதத் தீர்வையும் ஏற்படுத்தாது. மாறாக ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிரிழப்பிற்கும், கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்படுவதற்கும், இலட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாவதற்குமே வழிவகுத்து வருகின்றது

எனவே இலங்கைத்தீவில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கவும், மக்களின் அநியாய அழிவைத் தடுத்து, மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை தோற்றுவிக்கவேண்டும் என்பதை இலங்கையரசு கருத்தில்கொண்டு இனப்பிரச்சனைக்கு இராணுவ நடவடிக்கைகளினால் தீர்வுகாண முடியாது என்பதைப் புரிந்து செயற்படுவதுடன், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த உரிமைகளை சிதைக்காத வகையிலும், அவற்றை மேலும் இறுக்கமாக்கி, செழுமைப்படுத்தும் அடிப்படையிலும், இலங்கை அரசாங்கம் ஓர் அரசியல் தீர்வொன்றை முன்வைத்து தமிழ்மக்களின் சகல பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஓர் திட்டவட்டமான தீர்வைக் காணும்படி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றது.

## புரட்சிகர கியூபா நாட்டுக்கான எமது ஆதரவு.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப்பின் தொடர்ச்சியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தடைகளுக்கு முகம்கொடுத்து, பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் தனி ஒரு சோசலிச நாடாக கியூபா தொடர்ந்தும் இருந்து வருவதையிட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பெரு மகிழ்ச்சி அடைகின்றது. கியூபக் கம்யூனிஸ்ட் கட்சி தனது சோசலிசக் கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்து வருவதையிட்டு பெருமிதமடைவதுடன், கியூபக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எமது புரட்சிகர வாழ்த்துக்களை காங்கிரஸ் தெரிவிக்கின்றது, மூன்றாவது உலகநாடுகளிலுள்ள விடுதலை இயக்கங்களுக்கும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் கியூப புரட்சியானது ஓர் முன்மாதிரியாகவும், உந்து சக்தியாகவும் இருந்து வருகின்றது. அமெரிக்க பொருளாதார தடைகளுக்கு மத்தியில் மிகவும் கடினவாழ்க்கை நடாத்திவரும் கியூப மக்களின் போராட்டத்திற்கும் அதை வழிநடாத்திவரும் அதன் புரட்சிகரத் தலைவர் பிடல் காஸ்ரோ அவர்களுக்கும் தனது நட்பையும், ஒருமைப்பாட்டையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் தெரிவித்துக் கொள்கின்றது.

## மகா புருஷர் தோழர் பத்மநாபா

எமது காலஞ்சென்ற செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபா அவர்கள், ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தலைவராவார். இவர் தலைசிறந்த மனிதாபிமானி. தென் ஆசியாவில் மிகமுக்கியமான இடதுசாரித் த்லைவர்களில் ஒருவர். மிகச்சிறந்த சர்வதேசியவாதி. அவர் ஈழத்தமிழர்களின் விடுதலைக்காகவும், தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் ஈழத்தமிழர்களின் போராட்டம்பற்றிய ஓர் புரிதலை ஏற்படுத்துவதிலும், அங்கு சமூக மாற்றம் பற்றிய அக்கறைகொண்ட சக்திகளைப் பலப்படுத்துவதிலும், சர்வதேச அளவில் இந்தியா, பாலஸ்தீன விடுதலை இயக்கம், நிக்கரகுவாவின் சண்டிநிஸ்ரா விடுதலை முன்னணி, மற்றும் தேசிய விடுதலை இயக்கங்கள் ஜனநாயக மனித உரிமை இயக்கங்கள் ஆகியவற்றுடன் எமது நட்புறவைப் பேணுவதிலும் அவர் அளப்பரிய பங்கை ஆற்றினார். அத்தகைய ஒரு மாகா புருஷரை படுகொலை செய்ததன்மூலம் புலிகள் ஓர் வரலாற்றுத் துரோகத்தைப் புரிந்துள்ளனர். புலிகளின் இப்பாதகச் செயலை காங்கிரஸ் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

## புலிகளின் சிறையிலுள்ள அப்பாவிப் பொது மக்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

புலிகளின் சித்திரவதை முகாம்களிலும், சிறைகளிலும் உள்ள 50000 க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களையும், மற்றைய அரசியல் கட்சி உறுப்பினர்களையும் எமது ஸ்தாபன உறுப்பினர்களையும் உடன் விடுவிப்பதற்கான சகலநடவடிக்கைகளையும் சர்வதேச சமூகமும், மனித உரிமை இயக்கங்களும் , ஜனநாயக சக்திகளும் எடுக்கவேண்டுமென காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

## இந்திய இலங்கை ஒப்பந்தம்

இந்திய இலங்கை ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக தமிழ் தலைவர்களுடன் சிங்கள அரசாங்கங்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்யாவும் முன்னர் ஒருதலைப்பட்சமாக சிங்கள அரசாங்கங்களால் கிழித்தெறியப்பட்டன. இதே நிலை இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு ஏற்படக்கூடும் என எமது ஐயத்தை நாம் தெரிவித்த போது, இலங்கை அரசாங்கம் இவ்வொப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் என்பதற்கு, இந்திய அரசாங்கம் தமிழ்கட்சிகளுக்கு உத்தரவாதமளித்தது. இவ்வொப்பந்தத்தின் பிரகாரம், வடக்கு கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு செயற்பட்ட போதும், புலிகள் சிறிலங்கா அரசு கூட்டுச்சதியால் மாகாண அரசு கலைக்கப்பட்டதுடன், சிறிலங்கா அரசு மாகாணசபைகளுக்கான அதிகாரங்களையும் கூட இதுவரை வழங்கவில்லை.

இவ்வொப்பந்தம் இன்று கிடப்பிலேயே போடப்பட்டது மாத்திரமல்லாமல் புலிகளை அழிக்கின்றோம் என்றபோர்வையில், தமிழ் மக்களுக்கெதிரான ஓர் திட்டமிட்ட யுத்தத்தையும் இவ்வரசாங்கம் தொடர்ந்து நடாத்தி வருகிறது. எனவே இந்திய இலங்கை ஒப்பந்தம் சரியான முறையில் அமுல்படுத்தப்படுவதை இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும், இலங்கையின் இனப்பிரச்சனை தீர இந்தியா தனது பங்களிப்பை சரியான முறையில் செலுத்த வேண்டுமெனவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் இந்திய அரசைக் கோருகிறது.

## புலிகளின் அடாவடித்தனம்

வடக்கு கிழக்கிலுள்ள ஈழத் தமிழ் மக்களுக்கெதிராக புலிகள் நடாத்திவரும் காட்டுமிராண்டித்தனமான விடயங்கள் பின்வருமாறு :-

1. ஈழமக்களின் சுயாதீனமான போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல். அதற்கான அனுமதி எடுக்க ரூபா பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரை பணம் அறவிடுதல்.
2. வடக்கு கிழக்கிலுள்ள சிறுவர்களையும், சிறுமிகளையும் வலுக்கட்டாயமாக தம்முடன் இணைத்துக்கொண்டு அச்சிறார்களை தாக்குதல்களின்போது முன்வரிசையில் அனுப்பியமையால் யாழ். கோட்டை, ஆனையிறவு, முல்லைத்தீவு போன்ற இடங்களில் நடைபெற்ற யுத்தங்களில் ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் புலிகளால் காவுகொடுக்கப்பட்டனர். இச் செயற்பாட்டினால் ஈழமக்களின் இளையதலைமுறையினர் அநியாயமாக பலியிடப்பட்டுவருகின்றனர்
3. கடைகளிலும், வியாபாரிகளிடமும் கப்பம் அறவிடுதல், கப்பம் கொடுக்காதோரை சிறைகளில் அடைத்துச் சித்திரவதை செய்தல்.
4. புலிகளின் தவறுகளை விமர்சனம்செய்வோரையும், புலிகளின் பார்வையில்

படிப்பகம்

www.padippakam.com



சந்தேகத்திற்கிடமானவர்கள் என இவர்கள் கருதும் எவரையும் கைது செய்து சித்திரவதை செய்தல். இவர்களின் வதைமுகாம்களில் 5000க்கும் மேற்பட்ட அப்பாவிகள் இவர்களின் சித்திரவதை கொடூரங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

5. தனியார் மூலமும், கூட்டுறவுக் கடைகள் மூலமும் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருட்களை வழிமறித்து தமக்கெனவும், "மாவீரர்" களின் குடும்பங்களுக்கெனவும். கொள்ளையிடுதல். இதனால் கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதியை மிகுதிப்பொருட்களில் சேர்த்துவைத்து வியாபாரிகள் விற்பனை செய்வதால் பொருட்களின் விலைகள் அதிகம்.
6. தங்களின் இச்சைக்கு இணங்காத பெண் ஆசிரியர்களை இராணுவத்திற்கு தகவல் கொடுத்தார்கள் எனக்கூறி கொலை செய்தமை.
7. எமது ஆதரவாளர்கள் பலரையும் மேற்கூறிய காரணத்தைக்கூறி ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் படுகொலை செய்தமை.

இப்படியான அடாவடித்தனங்கள், அடக்கு முறைகள் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள் சகலவற்றையும் நிறுத்துமாறு புலிகளை வற்புறுத்தும்படி சகல ஜனநாயக முற்போக்கு அமைப்புக்களையும் சர்வதேச மனிதஉரிமை சங்கத்தினரையும் காங்கிரஸ் கோருகின்றது.

## காலஞ்சென்ற செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா கொலை வழக்கு

புலிகளினால் காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்யப்பட்ட எமது மறைந்த தோழர். தோழர். பத்மநாபாவும், அவருடன் கொலையுண்ட பனிரண்டு தோழர்களையும் கொலைசெய்ய புலிப் பயங்கரவாதிகளையும் கண்டுபிடித்து, விசாரணைக்குட்படுத்த தமிழக அரசும், தமிழக முதல்வரும் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளுக்கும் இவர்களைக் கைது செய்வதற்காக இரவுபகலாக உழைத்த சகல போலீஸ் அதிகாரிகளுக்கும் இக்காங்கிரஸ் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது. கொலையாளிகளைக் கைதுசெய்ய முன்னைய அரசு முயற்சிசெய்திருந்தால் காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி அவர்களின் கொலையையும் கூட தவிர்த்திருக்க முடியும். சென்னையின் மத்தியில் ஓர் பாரிய கொலை நடந்தும் கூட அது தொடர்பான கொலையாளிகளை தப்பிச்செல்ல விட்டமையும், பின்னர் அவர்கள் மீண்டும்வந்து இரண்டாவது பெரும் கொலைக்கு திட்டம்வகுக்க, சுதந்திரமாகத் திரிய அனுமதியளித்ததுமே பாரதத்தின் இளந் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் கொலைசெய்யப்பட்ட காரணங்களாகுமென காங்கிரஸ் நம்புகின்றது.

## புலிகளினால் கொலை செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களுக்கு இரங்கல்

ஈழத்தமிழ் மக்களின் ஏகோபித்த அன்பைப் பெற்றவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகமும், சிறந்த பாராளுமன்றவாதியுமான திரு. அமிர்தலிங்கம் அவர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் யாழ் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வெ.யோகேஸ்வரன் அவர்களும் 1989 ம் ஆண்டு கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் சிறி சபாரெத்தினம் உட்பட ஏனைய தமிழ்கட்சிகளின் தலைவர்களும் புலிகளால் கொலை செய்யப்பட்டனர். மாற்று அரசியற்கட்சித் தலைவர்களைக் கொலைசெய்யும் புலிகளின் இக்காட்டுமிராண்டித் தனத்தை காங்கிரஸ் வன்மையாகக் கண்டிப்பதுடன் இறந்த தமிழ்த்தலைவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மறைவுக்கு இரங்கல்

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், பாரதத்தின் இளந் தலைவரும், இலங்கைத் தமிழ்மக்களின் நலனில் அக்கறை கொண்டவரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உற்ற நண்பருமான திரு. ராஜீவ்காந்தி அவர்களை சென்னை சிறிபெரும்புதூரில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கோரமாகப் படுகொலை செய்தமையை காங்கிரஸ் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கும், அவரின் பிள்ளைகளுக்கும், இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்கும் இந்திய மக்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## புனிதப் பிரதேச பிரகடனம்

திருகோணமலையில் கோணேஸ்வரர் ஆலயமும், மன்னாரில் திருக்கேதீஸ்வரர் ஆலயமும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமைவாய்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலங்கள் ஆகும். அது மாத்திரமல்லாமல் இலங்கையிலும், இந்தியாவிலும் வசிக்கக்கூடிய இந்து மதத்தவரின் முக்கியமான ஸ்தலங்களாகவும், வழிபாட்டுத் தலங்களாகவும் இவை இருந்து வருகின்றன. ஆனால் மேற்கண்ட இரு ஆலயங்களும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பது மாத்திரமல்லாமல் திருக்கேதீஸ்வரர் ஆலயம் இராணுவத்தினரால் மிகவும் மோசமாக சீரழிக்கப்பட்டுமுள்ளது. திருகோணமலைக் கோணேஸ்வரர் ஆலயத்தில் இருக்கும் இராணுவ முகாம் வேறோர் இடத்திற்கு மாற்றப்படுவதுடன் கோணேசர் மலைப்பகுதியும் புனித ஸ்தல பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் இலங்கை மத்திய அரசைக் கோருகின்றது.

## ஈ. பி. ஆர். எல். எவ் இற்கு எதிரான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் நயவஞ்சகச் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

1988ம் ஆண்டு எமது மத்தியகமிட்டி உறுப்பினர் தோழர். ஐயா அவர்களும் மேலும் பல தோழர்களும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் நயவஞ்சகத் தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் 1990ம் ஆண்டு வட-கிழக்கு மாகாணசபை பிரதிச் சபாநாயகர் தோழர் கணேஸ் உட்பட மேலும் சில தோழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரின் இவ் நயவஞ்சகத்தனமான செயல்களை காங்கிரஸ் வன்மையாக கண்டிப்பதுடன் எதிர்வரும் காலங்களில் இப்படியான செயல்களை தொடரக்கூடாதென தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரை கேட்டுக்கொள்கிறது.

## தியாகிகள் தினப் பிரகடனம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகர்களில் ஒருவரும் 1990 யூன் 19 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட எமது ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமுமான தோழர் க. பத்மநாபா அவர்கட்கும், அவருடன் மறைந்த ஏனைய சகல தோழர்களுக்கும், விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது கட்சியில் இணைந்து பணியாற்றிய மறைந்த தோழர்கட்கும் காங்கிரஸ் வீர வணக்கத்தைத் தெரிவிப்பதுடன் யூன் 19ம் திகதியை 'தியாகிகள் தினமாக' பிரகடனப் படுத்துகின்றது.

## அரசு,புலிகள் மீதான மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டு

1991ம் ஆண்டு மத்திய காலப்பகுதி முதல் முடிந்த சமீபத்திய சம்பவங்கள்வரை கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினராலும் ஊர் காவல் படையினராலும் சட்டத்திற்கு புறம்பான கொலைகள் நடாத்தப்பட்டிருப்பதை அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. அது தொடர்பான விசாரணைகள் நடப்பது மந்த நிலையில் இருந்து வருகின்றது. கொக்கட்டிச் சோலையில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களின் படுகொலைக்குப் பொறுப்பாக இருந்த இருபது இராணுவத்தினரில் பத்தொன்பதுபேர் சகல குற்றச்சாட்டுகளிலும் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளும் மனிதஉரிமை மீறல்களை தொடர்ந்து செய்து வருகிறார்கள் என சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அவசரகாலச் சட்டத்தின் பதினைந்து விதிகள் தளர்த்தப்பட்டது

அவசர காலச்சட்டத்தின் கீழ் உள்ள பதினைந்து விதிகள் 3.2.93. முதல் தளர்த்தப் பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். இச்சட்ட விதிகளை தளர்த்த வேண்டும் என சர்வதேச மனிதஉரிமைகள் நிறுவனம் இலங்கை அரசை வற்புறுத்தியதனாலேயே இச் சட்டவிதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

ஆட்களை கைதுசெய்வது, தடுத்து வைப்பது, சொத்துக்களை சுவீகரிப்பது தொடர்பான சட்டத்தின் கீழ்வரும் பதினைந்து விதிகளே தளர்த்தப்பட்டுள்ளன. அவசரகாலச் சட்டத்தை நீக்கி நாட்டில் சுமுகமான நிலையை தோற்றுவிக்கும்படி அனைத்து எதிர்கட்சிகளும் நீண்டநாட்களாக அரசிற்குகோரிக்கை விடுத்துவந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்


## ஈழமக்கள் செய்தித்தொடர்பு நிலையம்
## EELAM PEOPLES INFORMATION CENTRE

| | | | |
|---|---|---|---|
| POST BAG - 1041<br>MADRAS - 600017<br>INDIA. | B.M.BOX - 1738<br>LONDON -WCIN -3XX<br>U. K. | P.FACH - 100206<br>4600 DORTMUND .1<br>GERMANY. | 11; R.SALINGRO<br>95140 GARGES<br>FRANCE. |
| P.BOX - 6800<br>AGINCOURT<br>ONTARIO - M1S3C6<br>CANADA. | P.FACH - 506<br>BERN - 17<br>SWITZERLAND | POST BOKS - 115<br>GROURD HAGENEN<br>0905 - OSLO - 9<br>NORWAY. | P.BOX - 52<br>LAVERTON<br>VICTORIA<br>AUSTERLIA |

### விரைவில் வெளிவரவிருக்கிறது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல்திட்டம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் செயலாளர்நாயகம் தோழர்.க.பிரேமச் சந்திரன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை.


ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சர்வதேச கிளைகளின் ஒன்றியத்தினால் புதியபார்வை வெளியிடப்படுகிறது.